Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 20 | விலை ரூபா 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :320 புரட்டாதி 30ஆம் நாள் வெள்ளிக்கிழமை 16 ஒக்ரோபர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## கொரோனா 74

கொழும்பு, ஒக்.16
கம்பஹா மாவட்டம், மினுவாங்கொட கொரோனாக் கொத்தணிப் பரவலில் தொடர்புடைய 74 தொற்றாளர்கள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருந்தவர்களும், அவர்க 18

வத்தளை, ஹெந்தலை சந்தியில் உணவுப் பொதிகளை விற்பனை செய்யும் நபரொருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர் கடந்த 3 ஆம் திகதி வரையில் ஹெந்தலை சந்தியில் உணவுப் பொதிகள் விற்பனை செய்து வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு எச்.என்.பி. ரவர் தலைமையகத்தில் பணிபுரியும் பணியாளர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது என்று அந்த வங்கி அறிவித்துள்ளது.

கொழும்பு மாநகரசபை ஊழியர் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இந்த ஊழியர் மாநகர சபையின் அறக்கட்டளை ஆணையாளர் பிரிவின் ஊழியராவார்.

கம்பஹா ராடோலுகாம பகுதி வீட்டுத் திட்டத்தில் நான்கு பேருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## சுகாதார விதிகளை மீறினால் 10,000

கொழும்பு, ஒக்ரோபர்16
சுகாதார நடைமுறைகளை மீறுபவர்களுக்குத் தண்டம் அல்லது சிறைத் தண்டனை விதிக்கும் ஏற்பாடுகள் கொண்ட சிறப்பு வர்த்தமானி அறிவித்தலில் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி கையொப்பமிட்டுள்ளார்.
புதிய கொரோனாத் தொற்றுத் தடுப்பு விதிமுறைகளுள் தனிநபர்கள் பொது இடங்களில் சமூக இடைவெளியைப் பேணுதல் மற்றும் முகக் கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. 18

## முடங்கும் நிலையில் கொழும்பு மாவட்டம்

கொழும்பு, ஒக்.16
கம்பஹா மாவட்டம், மினுவாங்கொட ஆடைத்தொழிற்சாலை கொரோனா கொத்தணியுடன் தொடர்புகளைப் பேணிய நபர்களுக்குக் கொரோனாத் தொற்று வேகமாக அதிகரித்து வரும் நிலையில் கொழும்பு மாவட்டத்தில் நாள்தோறும் பலர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.
தற்போதைய நிலைமையின்படி கொழும்பு மாவட்டத்தில் சமூகத் தொற்று அதிகரிக்கும் வாய்ப்புக் காணப்படுகின்றன எனச் சுகாதாரப் பிரிவினர் எச்சரி 18

### முச்சந்தி முரளி




## மூன்றாம் அலையில் கொழும்பு அடிபடும்!

*அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை*

கொழும்பு, ஒக்.16
இலங்கையின் கொரோனாவின் மூன்றாம் அலையில் ஆபத்து அதிகம் உள்ள மாவட்டமாக கொழும்பும் அடையாளம் காணப்பட்டுள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் செனால் பெர்னாண்டோ தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
கம்பஹா மாவட்டம் போன்று கொழும்பு மாவட்டமும் அதிக ஆபத்துள்ள பகுதியாக அடையாளம் காணப்பட்டுள்ளது. நாளொன்றுக்குப் 10 ஆயிரம் 18

## மூன்று கிராமங்கள் நேற்று முடக்கம்!

கொழும்பு, ஒக்.16
கம்பஹா மாவட்டம், மினுவாங்கொடைப் பிரதேசத்தில் மேலும் மூன்று கிராமங்களை சுகாதாரப் பிரிவினர் நேற்று முடக்கியுள்ளனர்.
ஹனிகிமுல்ல, பெரலந்தவத்தை, ஹெலகந்தான ஆகிய கிராமங்களையே சுகாதாரப் 18

## கைதைத் தடுக்கக் கோரி ரிஷாத் ரிட் மனுத் தாக்கல்

கொழும்பு, ஒக்.16
தான் கைது செய்யப்படுவதைத் தடுக்கும் உத்தரவை வழங்கக் கோரி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார். அவர் சார்பில் அவரது சட்டத்தரணி 15



## பொலிஸ் அதிகாரி விபத்தில் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஒக்.16
முல்லைத்தீவு, சிலாவத்தையில் நேற்று மாலை நடந்த விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றொரு உத்தியோகத்தர் காயமடைந்துள்ளார். 18

## கொரோனாவை வைத்து கோத்தா அரசு அரசியல்!

*சஜித் குற்றச்சாட்டு*

கொழும்பு, ஒக்.16
கொவிட்-19 வைரஸ் தாக்கத்தின் முதல் சுற்றைப் பொதுத் தேர்தலுக்காக பயன்படுத்திய அரசு இரண்டாம் சுற்றை அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்ற பயன்படுத்துகிறது.
இவ்வாறு எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச 18

## ரிஷாத் மனைவியிடம் சி.ஐ.டி. விசாரணை

கொழும்பு, ஒக்.16
அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரிஷாத் பதியுதீனைக் 18

## பட்டப்பகலில் வீடு புகுந்து 5 பவுண் நகை திருட்டு!

யாழ்ப்பாணம், ஒக்.16
யாழ்ப்பாணம், தெல்லிப்பளைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அளவெட்டி மேற்கு, தம்மளை பகுதியில் வீடொன்றில் இருந்து 5 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன.
இந்தத் திருட்டுச் சம்பவம் நேற்று பகல்வேளை நடந்து 18

## ஊடகர்கள் மீதான தாக்குதலை கண்டித்து நேற்று போராட்டங்கள்

முல்லைத்தீவு, ஒக்.16
சட்டவிரோத மரக் கடத்தல் தொடர்பாகச் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் இருவர் தாக்கப்பட்டமையைக் கண்டித்து நேற்று வடக்கிலும், கிழக்கிலும் போராட்டங்கள் நடத்தப்பட்டன.
வடக்கில், முல்லைத்தீவில் யாழ் ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டமும், பேரணியும் 18



# சுற்றாடலை அழிப்போரை கைதுசெய்ய தனிப்படை

## சுற்றாடல் அமைச்சு ஆரம்பிக்கவுள்ளது

கொழும்பு, ஒக். 16

திட்டமிட்ட சுற்றாடல் அழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை சுற்றிவளைப்பதற்காக பிரத்தியேக பிரிவொன்றை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளதாக சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இராணுவம் மற்றும் பொலிஸின் உயர்மட்ட அதிகாரிகள் இருவரின் தலைமையில் இந்த பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சுற்றாடல் அழிப்பு முன்னெடுக்கப்படும்போது உடனடியாக அதனை சுற்றிவளைக்கும் நடவடிக்கையில் குறித்த பிரிவு ஈடுபடவுள்ளது.

இதேவேளை, 103 ஆறுகளை பாதுகாக்கும் நோக்கில் புதிய வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

சுற்றாடலுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகள் தொடர்பிலான முறைப்பாடுகளைச் செய்வதற்காக சுற்றாடல் அமைச்சு புதிய அவசர அழைப்பு இலக்கங்களையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

சுற்றாடல் அமைச்சின் 1981, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் 1981, புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் 1921 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பு மேற்கொண்டு முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் என்றும் மஹிந்த அமரவீர மேலும் தெரிவித்தார். (த-இ)

## வவுனியாவில் சடலம் மீட்பு

வவுனியா, ஒக். 16

வவுனியா உக்கிளாங்குளம் பகுதியில் வீடு ஒன்றிலிருந்து குடும்பத்தலைவரின் சடலம் நேற்றிரவு மீட்கப்பட்டுள்ளது.

அந்த வீட்டில் தனிமையில் இருந்த ஜெகநாதன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த110)

## மோ.சைக்கிளை பதம்பார்த்த யானை

### ஒட்டுசுட்டானில் சம்பவம்

முல்லைத்தீவு, ஒக். 16

ஒட்டுசுட்டான் முத்தையன் கட்டு இரண்டாம் கண்டைப் பகுதியில் சாளம்பன் விவசாய நிலத்துக்குள் நேற்றுமுன்தினம் இரவு நுழைந்த யானை பன்னிரெண்டு தென்னம் பிள்ளைகளை பிடுங்கி அழித்துள்ளது. மற்றொரு விவசாயின் வாழைத் தோட்டத்தையும் நாசப்படுத்தியுள்ளது.

அதனைத் தொடர்ந்து சாளம்பன் கிராமத்தில் வீதியில் பயணித்தவரின் மோட்டார் சைக்கிளை துவம்சம் செய்துள்ளது. எனினும், அதைச் செலுத்திச் சென்றவர் தெய்வாதீனமாக உயிர்தப்பினார்.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள முத்தையன் கட்டுப்பகுதியில் குடிமனைக்குள் நுழையும் யானைகள் அடிக்கடி விவசாய உற்பத்திகளை நாசமாக்கி வருகின்றன. இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (தரி-1)

## இத்தாவிலில் துப்பாக்கி மீட்பு



கிளிநொச்சி, ஒக். 16

போர்க் காலத்தில் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் பழுதடைந்த கைத்துப்பாக்கி ஒன்று பளை இத்தாவில் பகுதியில் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

இத்தாவில் மற்றும் முகமாலை பகுதிகளில் போர் இடம்பெற்ற காலத்தில் புதைக்கப்பட்ட வெடிபொருள்கள் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் அகற்றப்பட்டு வருகின்றன. இந்நிலையில், அங்கு கைத்துப்பாக்கி அடையாளம் காணப்பட்டது. அதுபற்றி பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. (த-6)

## மோட்டார் குண்டு நீர்வேலியில் மீட்பு

கொடிகாமம், ஒக். 16

யாழ்ப்பாணம் நீர்வேலி ஜே/208 கிராம அலுவலர் பிரிவில் தோட்டக்காணியில் வெடிக்காத மோட்டார் குண்டு ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.

காணியைத் துப்பரவாக்கும்போது குறித்த குண்டு கண்டறியப்பட்டது. அது பற்றி கோப்பாய் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டது. அங்கு சென்ற விசேட அதிரடிப்படையினர் குறித்த குண்டை மீட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-159)



## தடைசெய்யப்பட்ட வலைகளுடன் வவுனியாவில் 10 பேர் கைது



வவுனியா,ஒக்.16

வவுனியா பாவற்குளம் பகுதியில் தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகளை உபயோகித்து மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் 10 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

வவுனியாவில் தேசிய நீர் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் விசேட அதிரடிப்படையினர் இணைந்து நேற்று காலை மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பில் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட நீர்-உயிரின செய்கை விரிவாக்கல் அதிகாரி யோ.நிசாந்தன் தலைமையிலான அலுவலர்கள் மற்றும் மடுகந்தை விஷேட அதிரடிப்படையினர் ஆகியோர் இணைந்து இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர். (த-110)


## தென்மராட்சியில் ஞாயிறன்று துப்புரவுசெய்ய பணிப்பு

சாவகச்சேரி, ஒக். 16

தென்மராட்சி பிரதேசத்தில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய உக்காத கழிவுப் பொருள்கள் காணப்படும் இடங்களைத் துப்பரவு செய்யுமாறு சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் சுதோகுமார் அறிவித்துள்ளார்.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தின் இறுதி நாளான நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை நாடு முழுவதும் துப்புரவு மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சின் டெங்கு கட்டுப்பாட்டு அலகின் ஏற்பாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் இந்த வாரத்தில், ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய இடங்களைத் துப்புரவு செய்யுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் துப்புரவு செய்யுமாறு சுகாதார மருத்துவ அதிகாரி அறிவுறுத்தியுள்ளார். (த-9)

## தண்டவாளத்தில் ஏறியது பஸ்; மீசாலையில் மாணவன் அருந்தப்பு



சாவகச்சேரி, ஒக். 16

வீதியின் குறுக்கே திடீரென்று வந்த மாணவனைக் காப்பாற்ற பஸ்ஸை வீதியோரமாகச் செலுத்தியபோது, அது ரயில் தண்டவாளத்தில் ஏறியது என்றும் தெரிவிக்கப்பட்டது. அதன்போது சைக்கிளும் பஸ்ஸும் மோதியதில் சைக்கிளில் பயணித்த மாணவன் காயமடைந்தான்.

இந்தச் சம்பவம் மீசாலை புத்தூர் சந்தியில் நேற்று மாலை இடம்பெற்றது.

காயமடைந்த மாணவன் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

யாழ்ப்பாணம் - கொழும்பு சேவையில் ஈடுபடும் காரைநகர் சாலைக்குச் சொந்தமான இ.போ.ச. பேருந்தே தண்டவாளத்தில் ஏறியது. பேருந்தில் பயணம் செய்தவர்களுக்கு பாதிப்பு ஏற்படவில்லை. மீசாலையைச் சேர்ந்த மாணவனே காயமடைந்தார். பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (த-9,159,ரி-1)

## சுகாதார உதவியாளர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கவும்

### போதனாவின் பிரதிப் பணிப்பாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 16

யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் சுகாதார உதவியாளர்களை நியமிக்க யாழ்ப்பாணத்திலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மருத்துவமனைப் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா கோரியுள்ளார்.

இந்த மருத்துவமனையில் சுகாதார உதவியாளர்களின் பணி தற்போதைய சூழ்நிலையில் அதிகரித்துக் காணப்படுகின்றது. அதனால் அமைய அடிப்படையில் புதிதாக சுகாதார உதவியாளர்களை பணிக்கு அமர்த்தவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே இந்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரில் ஆராய்ந்து தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார். (த)

# பண வசதியுடைய மாபியாக்கள் எம்முடன் மோதப் பார்க்கின்றார்கள்!

## முச்சக்கரவண்டிச் சாரதிகள் சங்கம் குற்றச்சாட்டு

வவுனியா,ஒக்.16

**வாடகைக் கார்களை எமது முச்சக்கரவண்டி தரிப்பிடங்களில் நிறுத்தி சேவையில் ஈடுபடுவதற்கே நாம் எதிர்ப்புத் தெரிவிக்கின்றோம். அதேவேளை, வசதி படைத்தவர்களால் கொள்வனவு செய்யப்படும் வாடகைக் கார்களை அறிமுகப்படுத்தி முச்சக்கரவண்டிகளின் சாரதிகளுடன் மோதவிட்டு வேடிக்கை பார்ப்பதற்கு சில மாபியாக்கள் விரும்புகின்றனர் என்றே நாங்கள் கருதுகின்றோம்.**

இவ்வாறு வவுனியா மாவட்ட முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ரவீந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் வாடகைக்கார் சேவைக்கு, முச்சக்கரவண்டித் தரிப்பிடங்களில் அனுமதி வழங்கியமையால் ஏற்பட்டுள்ள முரண் நிலைமை தொடர்பாக விளக்கமளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வாடகைக்கார் சேவைக்கு நாங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. எமது முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தில் 2ஆயிரத்து 650 அங்கத்தவர்கள் இருக்கின்றனர். மிகப்பெரிய கட்டமைப்பான எமது சங்கத்தை உடைப்பதற்காக முகம் தெரியாத விரோதிகளால் முன்னெடுக்கப்படும் திட்டமிட்ட சதிச் செயற்பாடாகவே நாம் இதனைப் பார்க்கிறோம்.

இந்தச் செயற்பாடானது எமது சங்க அங்கத்தவர்களிடையே பெரும் சமூக முரண்பாட்டை ஏற்படுத்தக் கூடிய விடயமாகவே உள்ளது.

ஒழுக்கமான முறையில் மக்களுக்கு சிறப்பான சேவையை வழங்கி வருகின்றோம். உழைப்புக்கும் அப்பால் தமிழ் மக்களால் முன்னெடுக்கப்படும் பல்வேறு உரிமைசார் போராட்டங்களுக்கும் கர்த்தால்களின் போதும் எமது முழுமையான ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்குவதற்கு நாம் எப்போதும் தவறியதில்லை. அத்துடன் எமது அங்கத்தவர்களுக்கு வருமானம் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

தேவை ஏற்படின் 25 வருடங்களாக சேவையில் ஈடுபடும் எமது சங்கத்தின் அங்கத்தவர்கள் எதிர்காலத்தில் கார்களைக் கொள்வனவுசெய்து சேவை செய்வதற்கும் தயாராகவே இருக்கின்றனர்.

நகரம் வளர்ச்சியடைந்துள்ளது. எனவே மக்களுக்கு சௌகரியமான பயணத்தை வழங்கும் முகமாக கார்களையும் சேவையில் ஈடுபடுத்துங்கள் என்று நகரசபை நிர்வாகம் எமது சங்கத்துடன் கலந்துரையாடியிருந்தால் நாம் அதனை நிறைவேற்றி இருப்போம். அதனைவிடுத்து 25 வருடங்களாக சேவை செய்யும் எமது அங்கத்தவர்களை அழைத்து நகரசபை பேசு மேற்கொள்ளாமல் இப்படியான வேலைத் திட்டத்தை மூடிமறைத்தமை எதற்காக என்பது எமக்கு விளங்கவில்லை. என்றார். (த-110)

# '20' ஐ நிறைவேற்றுவதில் அரசுக்கு திண்டாட்டம்!

## மூன்றிலிரண்டு பெரும்பான்மைக்காக பல திருத்தங்களை ஏற்கவேண்டிய சூழ்நிலை

கொழும்பு, ஒக். 16

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்ட வரைவை நிறைவேற்றிக்கொள்வதற்கான பெரும்பான்மையைத் திரட்டுவதில் அரசு நெருக்கடியை எதிர் கொண்டுள்ளது.

ஆரம்பத்தில் எதிர்பார்த்ததுபோல் அல்லாமல் பல திருத்தங்களுடனேயே '20' ஐ நிறைவேற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அரசமைப்பின் 20ஆவது திருத் தச் சட்ட வரைவை கைவிடுமாறு கத்தோலிக்க ஆயர்கள் பேரவை வலியுறுத்தியுள்ளதால் ஆளுங் கட்சியில் உள்ள கத்தோலிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களும் '20' விடயத்தில் தாம் முன்பு எடுத்திருந்த முடிவை மீள்பரிசீலனை செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மறுபுறத்தில் விமல் வீரவன்ஸ உள்ளிட்ட ஆளுங் கட்சி உறுப்பினர்களும் திருத்தங்கள் முன்வைத்துள்ளனர். எனவே, ஆரம்பத்தில் எதிர்பார்த்ததுபோல் அல்லாமல் பல திருத்தங்களுக்கு மத்தியிலேயே அரசு '20'ஐ நிறைவேற்றும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது அரசுக்கான பின்னடைவாகவே கருதப்படுகின்றது.

அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்ட வரைவு தொடர்பான உயர்நீதிமன்றத்தின் சட்டவியாக்கியானம் எதிர்வரும் 20 ஆம் திகதி சபாநாயகரால் நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்படும். இதனையடுத்தே 20 தொடர்பான அடுத்த கட்ட நகர்வுகள் இடம்பெறும். (ஒ-44)

# ஊடகவியலாளரின் பாதுகாப்பை உறுதி செய்வது அரசின் கடமை!

## அமைச்சர் மஹிந்த அமரவீர சுட்டிக்காட்டு



கொழும்பு, ஒக். 16

ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வது அரசின் பிரதான கடமையாகக் கருதுகின்றோம். இவ்வாறு சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். சுற்றாடல் அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த வாரம் முல்லைத்தீவு மற்றும் மொனராகலை ஆகிய பிரதேசங்களில் சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் தகவல் சேகரிப்பதற்காகச் சென்றவர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என்று ஊடகங்களில் வெளியான செய்திகள்மூலம் அறியக்கிடைத்தது.

இது தொடர்பில் பதில் பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்துள்ளேன். இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுவதற்கு இனியொருபோதும் நாம் இடமளிக்கப்போவதில்லை. ஊடகவியலாளர்களுக்கு இவை தொடர்பில் ஆராய்வதற்கு உரிமையுள்ளது.

அந்த உரிமைகளுக்கு இடையூறு ஏற்படுத்தப்பட மாட்டாது.

ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதை அரசின் பிரதான கடமையாக நாம் கருதுகின்றோம். எனவே, அவர்கள் வேண்டிய இடங்களுக்குச் சென்று சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுத்தப்படுவது குறித்து உண்மைத் தகவல்களைச் சேகரிக்க முடியும். அந்த வாய்ப்புக்களை நாம் நீக்கப்போவதில்லை. அதற்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவொரு நபருக்கு எதிராகவும் சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதிலிருந்து பின்வாங்கப் போவதில்லை, என்றார். (ஒ-22)

# உ/த வெட்டுப்புள்ளி தயாரிக்கும் பணி நிறைவு

கொழும்பு, ஒக். 16

2019 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர பரீட்சைக்கான வெட்டுப்புள்ளி தயாரிக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது. தயாரிக்கப்பட்டுள்ள வெட்டுப் புள்ளிகளை வெளியிடுவது தொடர்பாக இதுவரை எந்தவொரு தீர்மானமும் எட்டப்படவில்லை என அந்த ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க கூறியுள்ளார்.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதத்தில் க.பொ.த உயர்தர பரீட்சைகள் நடைபெற்ற நிலையில் வெட்டுப்புள்ளிகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டது. இதற்கு மாணவர்கள் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

கொரோனா அச்சுறுத்தல் நிலைமை காரணமாகவே வெட்டுப்புள்ளிகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டது என மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சம்பத் அமரதுங்க கூறியுள்ளார்.

தற்போது க.பொ.த உயர்தர பரீட்சைகள் இடம்பெற்று வருவதால் வெட்டுப் புள்ளிகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என அவர் மேலும் கூறியுள்ளார். (ஒ-இ)



# பஸ்ஸின் மீது விழுந்தது மரம்

## பயணிகள் இல்லாததால் உயிராபத்து தவிர்ப்பு

வவுனியா, ஒக். 16

வவுனியா செட்டிகுளம் பகுதியில் அரச பஸ்மீது மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததில் பஸ் கடுமையாகச் சேதமடைந்தது.

நேற்று மதியம் வவுனியாவில் இருந்து செட்டிகுளத்திற்குச் சென்ற குறித்த அரச பஸ் பயணிகளை இறக்கிய பின்னர் மீண்டும் வவுனியா நோக்கி புறப்படுவதற்காக நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. இதன்போது குறித்த பகுதியில் நின்ற பழமையான பாலை மரம் அடியோடு சரிந்து பஸ்ஸின் மீது வீழ்ந்துள்ளது. பஸ்ஸில் பயணிகள் யாரும் இல்லாதமையால் உயிராபத்துத் தவிர்க்கப்பட்டது. (ம-110)

# விலைகுறைப்பு வர்த்தமானி விரைவில்

கொழும்பு, ஒக். 16

அத்தியாவசிய பொருள்களின் விலைகளை குறைப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல் அரச அச்சகத்துக்கு கிடைக்கப் பெற்றுள்ளது என அரச அச்சக அதிபர் கங்கானி லியனகே தெரிவித்துள்ளார்.

தற்போதைய வாழ்க்கைச் செலவு மற்றும் கொரோனா நிலைமையை கருத்திற்கொண்டு பருப்பு, ரின் மீன், பெரிய வெங்காயம், சீனி ஆகிய அத்தியாவசிய பொருள்களுக்கான இறக்குமதி வரியை கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் அரசு நீக்கியது.

இதற்கமைய நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நடைமுறையாகும் வகையில் ரின்மீன் (பெரியது) ஒன்று 200 ரூபாய்க்கும் பெரிய வெங்காயம் ஒரு கிலோகிராம் 100 ரூபாய்க்கும் சீனி ஒரு கிலோகிராம் 85 ரூபாய்க்கும் பருப்பு ஒரு கிலோகிராம் 150 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டது. (ஒ-இ)

# கொரோனாவை கட்டுப்படுத்த சட்ட ஏற்பாடுகளை செய்யுங்கள்

## எதிர்க்கட்சி வலியுறுத்து



**கொழும்பு, ஒக். 16**

**நாட்டில் 22 மாவட்டங்களில் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான சட்டதிட்டங்களை அரசு உடனடியாக இயற்ற வேண்டும் என்று எதிர்க்கட்சி பிரதம கொறடாவான நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷமன் கிரியல்ல தெரிவித்தார்.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் கொரோனா பரவி 10 மாதங்கள் ஆகப்போகின்றன. எனினும், வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்துவதற்கு தேவையான சட்டபூர்வ ஏற்பாடுகள் இன்னும் செய்யப்படவில்லை. ஊரடங்கு கூட சட்டவிரோதமான முறையிலேயே பிறப்பிக்கப்பட்டுள்ளது. தற்போதைய சூழ்நிலையில் ஊரடங்கு அவசியம் என்பதால் இது விடயத்தில் நாம் மௌனம் காத்தோம். எனினும், எவராவது சவாலுக்குட்படுத்தினால் அரசின் நடவடிக்கை சட்டவிரோதமாகவே அமையும். இனியாவது தேவையான சட்ட நடவடிக்கைகளை இயற்றுமாறும், கொரோனா ஒழிப்பு நடவடிக்கையை சட்டப்பூர்வமாக முன்னெடுக்குமாறும் கோருகின்றோம்.

நெருக்கடியான சூழ்நிலையில் நாட்டின் நலன்கருதி இது விடயத்தில் அரசுக்கு ஆதரவு வழங்குவதற்கு பிரதான எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் நாம் தயாராகவே இருக்கின்றோம்.

எனினும், தனித்து பெயர் போட்டுக்கொள்வதே இந்த அரசின் இலக்காக இருக்கின்றது. முகக்கவசம் அணிவதற்குகூட இங்கு சட்டம் இல்லை. பிரிட்டன், சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இதற்கான சட்ட ஏற்பாடுகள் உருவாக்கப்பட்டுள்ளன. இங்கு வர்த்தமானி வரும் எனக் கூறப்படுகின்றது. எங்கே அந்த வர்த்தமானி, என்று கேள்வி எழுப்பினார். (ஒ,44)

## பொன்சேகா பெங்களூரில் கைது

கொழும்பு, ஒக்.165

பாதாள உலகக் குழு உறுப்பினரான சுனில் பொன்சேகா என்பவர் பெங்களூரில் கைது செய்யப்பட்டுள்ளார் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இலங்கையின் பாதுகாப்பு தரப்பினரால் தேடப்பட்டு வந்த சுனில் பொன்சேகா, போதைப்பொருள் கடத்திய குற்றச்சாட்டில் தமிழக பொலிஸாரால் கடந்த 2003 ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்டு, புழல் சிறையில் அடைக்கப்பட்டார். சுமார் 7 வருட சிறைத் தண்டனையின் பின் வெளியே வந்த அவர், தனது பெயர் மற்றும் அடையாளங்களை மாற்றி, இந்திய குடிமகனுக்கான ஆவணங்களையும், போலிக் கடவுச்சீட்டையும் பெற்றுள்ளார்.

அவர், கடந்த 2010 ஆம் ஆண்டில் இருந்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தனது அடையாளத்தை மாற்றி தலைமறைவாக வாழ்ந்து வந்தார் என இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. தமிழகத்தில் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வந்த பொன்சேகா, பெங்களூரில் தலைமறைவாகியிருந்தார். இதனையடுத்து, அவரை பெங்களூரில் வைத்து தமிழக க்யூ பிரிவு பொலிஸார் கைதுசெய்துள்ளனர். (வ-இ)



## கசிப்புடன் ஒருவர் கைது

கிளிநொச்சி, ஒக்.16

சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இராமநாதபுரம் நாவல் காட்டுப்பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடமிருந்து 350 லீற்றர் கோடாவும் 40 லீற்றர் கசிப்பும், கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர் விசாரணையின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என இராமநாதபுரம் பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி தெரிவித்தார். (வ-113)

## குழாய்க் கிணறு கையளிப்பு



வவுனியா, ஒக்.16

தமிழ் நிலம் மக்கள் அமைப்பினரால் வவுனியா பனிக்க நீராவி கிராமத்தில் குழாய்க் கிணறு ஒன்று அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது. லண்டனில் வசிக்கும் பத்மநாதன் பலஸ்காந்தன் என்பவரது குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் இதற்கான ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதிப்பங்களிப்பை வழங்கியுள்ளனர். இக்குழாய்க் கிணற்றின் மூல மாக 25 குடும்பங்கள் தங்கள் குடிதண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும் என தமிழ் நிலம் மக்கள் அமைப்பின் தலைவர் வி.விநோகரன் தெரிவித்தார். (வ-110)

## விவசாயிகளுக்கு அதிக விலை; நுகர்வோருக்கு சலுகை விலை

### கவனம் செலுத்தும் ஜனாதிபதி

கொழும்பு, ஒக்.16

விவசாயிகளுக்கு அதிக விலையும் நுகர்வோருக்கு சலுகை விலையும் கிடைக்கும் வகையிலான சந்தையை உருவாக்கவேண்டியதன் அவசியம் தொடர்பில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கவனம் செலுத்தியுள்ளார்.

வாழ்க்கைச் செலவு குழுவுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். நாட்டின் அனைத்து பிரதேசங்களினதும் அறுவடைகளை இடைத்தரகர்களின் சம்பந்தமின்றி விற்பனை செய்யும் வசதியை விவசாயிகளுக்கே நேரடியாகக் கிடைக்கும் சூழலை ஏற்படுத்தி அதனை ஆரம்பிக்க முடியும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (வ-இ)



## பள்ளத்தில் வீழ்ந்த ஓட்டோ; குழந்தை உயிரிழப்பு

பாதையிலிருந்து விலகி 310 அடி பள்ளத்தில் வீழ்ந்து ஓட்டோ ஒன்று விபத்துக் குள்ளானதில் ஒன்றரை வயது குழந்தையொன்று ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளது. ஹப்புத்தளை பகுதியின் கீழ் விகாரகலை என்ற இடத்தில் நேற்று மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஓட்டோவில் சாரதி உட்பட ஆறுபேர் பயணித்துள்ளனர். அவர்களில் குழந்தையின் தாயாரும் உள்ளடங்குகின்றார். காயமடைந்தவர்கள் தியத்தலாவை அரச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் இருவர் தீவிர சிகிச்சைப்பிரிவில் உள்ளனர். உயிரிழந்த சிறுவனின் சடலம் ஹல்துமுள்ளை அரசினர் மருத்துவமனை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் ஹப்புத்தளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சாகர தயாரட்ன தலைமையிலான குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (வ-இ)

## சிறைகளுக்கு புதிய பாதுகாப்பு படையணி

கொழும்பு, ஒக்.16

விசேட பாதுகாப்பு படையணி ஒன்றை சிறைச்சாலை கட்டமைப்புக்குள் உள்வாங்குவது தொடர்பில் சிறைச் சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சு அவதானம் செலுத்தியுள்ளது.

அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலில், இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே இது தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளார். கைதிகளை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும்போது, சிறைச்சாலை அதிகாரிகளுக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல் மற்றும் வெளிநபர்களினால் கைதிகளுக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல் என்பனவற்றை கருத்திற்கொண்டு விசேட பாதுகாப்பை வழங்க கவனம் செலுத்தப்படுகிறது. இதற்கமைய, ஆரம்பிக்கப்படவுள்ள புதிய படையணிக்காக விசேட இராணுவப் பயிற்சியை வழங்குவது தொடர்பிலும் இந்தக் கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது. (வ-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## இறுக்கமான போக்கு காலத்தின் தேவை

பகிடிவதைக்கு எதிராக யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் எடுத்துள்ள காத்திரமான நடவடிக்கை வரவேற்புக்குரியது. இறுக்கமான கண்டிப்பான நடவடிக்கைகள் மூலமே இந்தப் பிறழ்வான கலாசாரத்தைக் கட்டுப்படுத்த முடியும்.

உயர்கல்விக் கூடத்தில் புதுமுக மாணவர்களுக்கும், கற்றுக்கொண்டிருக்கும் பழைய மாணவர்களுக்கும் இடையிலான அறிமுக புரிந்துணர்வுச் செயற்பாடே பகிடிவதை என்று கூறப்பட்டாலும், அது புதுமுக மாணவர்களுக்கு வதையாக இப்போது மாறிவிட்டது.

பகிடிவதை அச்சுறுத்தல் மற்றும் வன்முறை மிக்கதாகவும், பல மாணவர்களுக்கு உள, உடல் ரீதியான வடுக்களை உருவாக்குவதாகவும் மாற்றம் பெற்றுவிட்டது. பகிடிவதை மிக மோசமாக முன்னெடுக்கப்படுவதன் விளைவாக 2019ஆம் ஆண்டில் மட்டும் சுமார் 2 ஆயிரம் மாணவர்கள் உயர் கல்வியை கைவிட்டுள்ளனர். பல்வேறு சிரமங்களின் மத்தியில் பல்லைக்கழகம் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்குத் தெரிவாகும் மாணவர்களில் ஒரு தொகுதியினர் தங்கள் உயர் கல்வியைத் தொடர்வதற்குப் பகிடிவதை பெரும் தடைக்கல்லாக மாறியுள்ளது என்பது பெரும் அதிர்ச்சியே.

இலங்கையில் கல்வி நிறுவனங்களில் பகிடிவதை மற்றும் ஏனைய வடிவங்களிலான வன்முறைகளைத் தடைசெய்யும் சட்டத்தின்படி பகிடி வதை தண்டனைக்குரிய குற்றமாக்கப்பட்டுள்ளது. இருந்தாலும் இப்போது வரையில் பல்கலைக்கழகங்களில் பகிடிவதைகள் நடந்தவண்ணமே உள்ளன. பகிடிவதைகளில் ஈடுபடும் மாணவர்கள் குறைந்தபட்சத் தண்டனைகளோடு விடுவிக்கப்படுவதும் இதற்குக் காரணமாகின்றது.

தற்போது யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் பகிடி வதையில் ஈடுபட்டு கல்வித்தடை விதிக்கப்பட்ட மாணவர்களில் சிலர் முன்னரும் பகிடிவதைக்காகத் தண்டிக்கப்பட்டுள்ளனர். கடந்த காலங்களில் இறுக்கமான நடவடிக்கைகள் எடுக்கப்படாததன் விளைவே அவர்கள் மீண்டும், மீண்டும் பகிடிவதையில் ஈடுபடக் காரணமாகியுள்ளது.

அனைத்து மாணவர்களுக்கும் தங்கள் கல்வி நடவடிக்கைகளை சுதந்திரமாகவும், அச்சமின்றியும் முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான சூழல் உருவாக்கப்பட வேண்டும். பல்கலைக்கழகங்கள் புத்தாக்கம் மற்றும் வளர்ச்சிக்கான வெளிகளாக உருவாக வேண்டுமானால் பகிடிவதை போன்ற மோசமான செயற்பாடுகள் ஒழிக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் இந்த மோசமான கலாசாரத்தை ஒழிக்கும் பாதையில் காலடி எடுத்து வைத்துள்ளது. அது பாராட்டுக்குரியது. பகிடிவதையில் ஈடுபட்ட மாணவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கடுமையான தண்டனைகள், ஏனைய மாணவர்களைச் சிந்திக்க வைக்கும். அவர்களை அதிலிருந்து தள்ளி நிறுத்தும். இந்த மோசமான கலாசாரத்தை முடிவுறுத்தும்.

# ஜனநாயகக் கடமையை நிறைவேற்றிய ரிஷாத்தைக் கைதுசெய்வது அபத்தம்!

## ஹரீஸ் எம்.பி. கடும் கண்டனம்



கொழும்பு, ஒக். 16

**'இலங்கை முஸ்லிம்களை இலக்குவைத்து முஸ்லிம்களுக்கும், முஸ்லிம் தலைமைகளுக்கும் அபகீர்த்தியை உண்டாக்க முயற்சித்துக் கொண்டிருக்கும் தெற்கின் கடும்போக்குவாத செயற்பாட்டாளர்களைத் திருப்திப்படுத்துவதற்காக ஒரு சிறுபான்மைக் கட்சியின் தலைவரை இலக்குவைத்து செயற்படுவது மிகவும் கண்டிக்கத்தக்க செயலாகும்' இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்தார்.**

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனைக் கைதுசெய்யும் முயற்சி தொடர்பில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'இந்த நாட்டில் இனவாத முரண்பாடுகளை உண்டாக்கி நாட்டைச் சீரழிக்கத் துடிக்கும் சில பேரினவாத சக்திகளின் நிகழ்ச்சி நிரலுக்கு அரசு செவிசாய்ப்பது அவ்வளவு ஆரோக்கியமான விடயமல்ல. நாட்டிலுள்ள சகல இனங்களையும் சரி சமமாக மதித்து உரிய கௌரவத்தை வழங்க வேண்டிய அரசே ஜனநாயகக் கடமையைச் செய்வித்த அப்போதைய அமைச்சர் ஒருவரைக் கேள்விக்குட்படுத்திக் கைதுசெய்ய எத்தனிப்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு ஜனநாயகக் கடமையான வாக்கைச் செலுத்த வழியேற்படுத்திக் கொடுத்தார் என்பதைக் குற்றமாகச் சுமத்தி கைதுசெய்ய முனைவது கவலையளிக்கின்றது. அரசின் இந்தச் செயலானது சிறுபான்மை மக்களை அரசிடமிருந்து வெகுவாகத் தூரமாக்கும் என்பதை அரசுக்கு கூறி வைக்க விரும்புகின்றேன். இவ்வாறான செயற்பாடுகளை மக்கள் பிரதிநிதி என்ற வகையில் வன்மையாகக் கண்டிக்கின்றேன்' - என்றுள்ளது.

(ம-22)

# ரிஷாத்துக்கு எதிராக கேவலமான நடவடிக்கை

## ராஜித இடித்துரைப்பு

கொழும்பு, ஒக். 16

"முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனையையும் அவரது சகோதாரர் ரியாட் பதியுதீனையும் கைதுசெய்வதற்கான முயற்சிகள் அரசியல் நோக்கம் கொண்டவை. எனவே, அரசு இந்தக் கேவலமான நடவடிக்கையை உடன் நிறுத்த வேண்டும்" இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'என்ன நடக்கின்றது என்பது எங்களுக்கு தெளிவாகத் தெரிகின்றது. ரிஷாத் பதியுதீனின் சகோதரர் ரியாட் பதியுதீன் விடுதலை செய்யப்பட்ட பின்னர் அவரை மீண்டும் கைதுசெய்யுமாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் 100 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்தனர். ரியாட் பதியுதீனை மீண்டும் சந்தேகநபராக்குவதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன.

ரியாட் பதியுதீனை மீண்டும் கைதுசெய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுத்த நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவராவது விசாரணை அறிக்கையை ஆராய்ந்துள்ளாரா? - என்றார்.

(ம-22)

# நோயாளரின் எண்ணிக்கையை வரையறுக்க முடிவு

கொழும்பு, ஒக்.16

கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கையை வரையறுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது காணப்படும் கொரோனா குறித்த அச்ச நிலைமை காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். இதற்கமைய கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக (கிளினிக்) சேவையைப் பெற்றுக்கொள்ளும் நோயாளர்கள் 0113618727, 0113618728, 0113618736, 0113618730, 0113618735 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு அது தொடர்பான சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ப-இ)

## தனிமைப்படுத்தப்பட்ட இடங்களில்

# அத்தியாவசியப் பொருள் வீடுவீடாக விநியோகம்

கொழும்பு, ஒக். 16

கம்பஹாவில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பகுதி மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை அவர்களின் வீடுகளுக்கு விநியோகிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள போதிலும் அப்பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்களை சுகாதார வழிகாட்டல்களின்கீழ் மீளத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார். அத்துடன், நடமாடும் சேவைகள் மூலம் பொருள் களை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சதொச உள்ளிட்ட நிலையங்கள் திறக்கப்படாதமையால், அப் பகுதியிலுள்ள மக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றமை குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய வர்த்தக நிலையங்களைத் திறப்பதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது - என்றார்.

(ம-22)

# கொரோனாத் தொற்றால் கேட்கும் திறனுக்கு பாதிப்பு

## ஆய்வில் புதிய தகவல்

கொழும்பு,ஒக்.16

**கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாவதால் சிலருக்கு காது கேட்கும் திறன் நிரந்தரமாக இழக்கும் வாய்ப்பு உள்ளது என்று ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது.**



இங்கிலாந்து விஞ்ஞானிகள் இது தொடர்பான ஆய்வை முன்னெடுத்துள்ளனர்.

கொரோனா வைரஸின் பக்க விளைவாக செவித்திறன் இழப்பு ஏற்படுவதாகவும், உடனடிச் சிகிச்சை அளிப்பதன் மூலம் கேள்திறனை மீட்டெடுக்க முடிமெனவும் விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

லண்டனில் 45 வயதான ஆஸ்துமா நோயாளி ஒருவர் கொரோனா ரைவஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு தீவிர சிகிச்சையின் பின்னர் குணமடைந்தார். எனினும் அவரது காதுகள் கேட்கும் திறனை இழந்துள்ளன. வைரஸால் ஏற்படுகின்ற அழற்ச்சியும், உடலில் இரசாயனங்கள் அதிகரிப்பதும், காதுகள் கேட்கும் திறனை இழக்கச்செய்கின்றன என ஆய்வை மேற்கொண்ட விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர். (ஐ-இ)



## தனிமைப்படுத்தல் நிறைவு; 117 பேர் வீடு திரும்பினர்

யாழ்ப்பாணம்,ஒக்.16

கொரோனாத் தொற்றுக் காரணமாக விடத்தற்பளை தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த 117 பேர் தனிமைப்படுத்தலை நிறைவுசெய்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக கட்டார் நாட்டுக்குச் சென்று நாடு திரும்பிய 117 பேர் 45 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டனர். இவர்களே தனிமைப்படுத்தலை நிறைவுசெய்து நேற்று வீடுகளுக்கு அனுப்பப்பட்டனர். (ஐ-இ)

20ஆவது திருத்தம்

## ராஜபக்ஷக்களுக்கும் பேராபத்தான ஒன்று

### சஜின் வாஸ் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 16

'அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் ராஜபக்ஷக்களின் அடுத்த தலைமுறைக்கு எதிர்காலத்தில் பாதிப்பை ஏற்படுத்தும். இந்தத் திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்புட்டு நடைமுறைக்கு வந்தால் தற்போதைய ஆட்சி முறையிலும் பெரும் தாக்கத்தைச் செலுத்தும்.' இவ்வாறு மஹிந்த அணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குண வர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் ஜனாதிபதியை மாத்திரம் பலப்படுத்தும். யார் ஜனாதிபதியாக இருந்தாலும் அவரை அது பலப்படுத்தும். 20ஆவது திருத்தத்தின் நகல் வடிவம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதை ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான சச்சரவின் வெளிப்பாடாகவே நான் கருதுகின்றேன்.

ஜனாதிபதி மக்களுக்குத் தான் அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாத நிலையில் காணப்படுகின்றார்.

அதேவேளை, பிரதமர் தனது வாரிசுகளைக் கருத்தில்கொண்டு அதிகாரத்தைத் தக்கவைக்க முயல்கின்றார். 20 ஆவது திருத்தம் என்பது ராஜபக்ஷக்களின் அடுத்த தலைமுறைக்கு எதிர்காலத்தில் பாதிப்பை ஏற்படுத்தப்போகும் விடயமாக அமையும்' - என்றார். (ம-22)

நவராத்திரியை முன்னிட்டு

## 40 இந்து ஆலயங்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபா நிதி

கொழும்பு,ஒக்.16

நவராத்திரி தினத்தை முன்னிட்டு இந்து சமய விழுமியங்களை ஊக்குவிக்கும் வகையில் நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 40 இந்து ஆலயங்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வு நேற்று அலரி மாளிகையில் நடைபெற்றது.

நிகழ்வில் கடற்றொழில் வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, தோட்ட வீடமைப்பு உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், பிரதமரின் பதுளை மாவட்ட இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான், நுவரேலிய மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ராமேஸ்வரன், பிரதமரின் செயலாளர் காமினி செனரத், புத்தசாசன,மத விவகார மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

கொவிட்-19 நிலைமையை கருத்தில் கொண்டு சுகாதார வழிமுறைகளை பேணி நிகழ்வு நடைபெற்றது. (ஐ-இ)

## வல்வை நகர சபையின் பாதீடு மக்கள் பார்வைக்கு!

வல்வெட்டித்துறை, ஒக்.16

வல்வெட்டித்துறை நகர சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட முன்மொழிவுகள் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன என்று நகரசபையின் தவிசாளர் கோ.கருணானந்தராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

2021ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட வரைவு தயாரிக்கப்பட்டு உங்கள் கருத்துக்களுக்காக தரப்பட்டுள்ளது. இதில் 73,622,700ரூபா வருமானத்தை எதிர்பார்த்தும் 73,620,840 ரூபா செலவின மதிப்பீட்டிற்கமையவும் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டு வினைத்திறன் மிக்கதாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. இவ் வரவு - செலவுத்திட்டத்தில் வழமையான மீண்டுவரும் செலவினங்களுக்கும் மூலதனச் செலவினங்களுக்கும் அத்துடன் உறுப்பினர்களால் முன்மொழியப்படும் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ் வரவு-செலவுத்திட்டத்தை நன்கு ஆராய்ந்து திருத்தங்கள் ஏதுமிருப்பின் அவற்றை அறியத்தந்து தேவையான பயன்மிக்க மாற்றங்களைச் செய்து வரவு-செலவுத்திட்டத்தை அங்கீகரித்து இதில் மதிப்பிடப்பட்டுள்ளவாறு வருமானங்களை ஈட்டிக்கொள்ளவும் சிக்கனமான முறையிலே செலவினங்களை மேற்கொண்டு வினைத்திறன்மிக்க சேவைகளை மக்களுக்கு வழங்கவும் திட்மிடப்பட்வாறான சகலசெயற்றிட்டங்களையும் நடைமுறைப்படுத்தவும் சபை உறுப்பினர்களினதும் பிரதேச மக்களினதும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களினதும் ஒத்துழைப்பை அன்புடன் வேண்டி நிற்கின்றேன் - என்றார். (ப)

## நவராத்திரி தினத்தில் சிறப்பு வழிபாடுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.16

உலகெங்கும் பரந்து வாழும் இந்துக்களால் கடைப்பிடிக்கப்படும் நவராத்திரி விரதம் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு இந்து ஆலயங்களில் சிறப்பு வழிபாடுகள் இடம்பெறும்.

கோப்பாய் வடக்கு இலுப்பையடிவீரகத்தி விநாயகர் ஆலயத்தில் தினமும் மாலை. 5 மணிக்கு சிறப்பு பூசை வழிபாடுகள் நடைபெறும். 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு மானம்பூ திருவிழா நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

✦✦✦

கொழும்புத்துறை மேற்கு வதிரியீட விநாயகர் ஆலயத்தில் நவராத்திரி பூசை வழிபாடுகள் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெறும்.

தினமும் மாலை 4 மணிக்கு விசேட அபிஷேகத்துடன் பூசைகள் ஆரம்பமாகி நடைபெறும். தொடர்ந்து எதிர்வரும் 25ஆம் திகதி விஜயதசமி தினத்தன்று மாலை மானம்பூ திருவிழா நடைபெறும்.

✦✦✦

நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தில் நவராத்திரி பூசை. நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு சிறப்பு பூசைகளுடன் ஆரம்பமாகி நடைபெறும்.

✦✦✦

நீர்வேலி தெற்கு மனோன்மணி அம்மன் ஆலயத்தில் நவராத்திரி பூசை வழிபாடுகள் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். (ஐ-17)

## இரு வீதிகள் சீரமைப்பு

மானிப்பாய், ஒக்.16

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட, இரு வீதிகள் பிரதேச அபிவிருத்தி உதவியளிக்கும் திட்டத்தின் கீழ் சீரமைக்கப்படவுள்ளன.

பிரதேச சபைத் தவிசாளர் அ.ஜெபநேசன் இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

மக்களின் முன்னுரிமைத் தெரிவின் பிரகாரம் முன்னெடுக்கப்பட்ட சுதுமலை சின்மயபாரதி மாப்பியன் ஆலை வீதி, கட்டுடை டச்சு வீதி 2 ஆம் ஒழுங்கையின் கட்டம்-1 ஆகிய இரு வீதிகளே இவ்வாறு சீரமைக்கப்படவுள்ளன (ஐ-50)

## இரு காணிகளுக்கு சிவப்பு அறிவித்தல்

யாழ்ப்பாணம்,ஒக்.16

யாழ்ப்பாண மாநகர பிரதேசத்தில் துப்புரவு செய்யப்படாமல் இருந்த இரண்டு வெற்றுக்காணிகளுக்கு சிவப்பு அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. தற்போதைய டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் யாழ்ப்பாண மாநகர சபை சுகாதாரப் பிரிவால் முன்னெ டுக்கப்பட்டு வருகின்றன.

பராமரிப்பு இன்றிக் காணப்படும் இந்த வெற்றுக்காணிகளில் படர்ந்து வளர்ந்திருக்கும் பற்றைகளால் நுளம்புகளின் பெருக்கமும் அதிகரித்துக் காணப்படுகிறது என சுகாதாரப் பிரிவு தெரிவித்தது. (ஐ-17)

## வாகன விபத்தில் மூவர் காயம்

கொழும்பு, ஒக்.16
இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதியதில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட மூவர் காயமடைந்தனர்.
இந்த விபத்து பாணந்துறை வடக்கு, ஹேனமுல்ல சந்தியில் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.
பாணந்துறை வடக்கு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியே விபத்தில் காயமடைந்தார்.
சட்ட விரோதமாக மோட்டார் சைக்கிள் பந்தயம் இடம்பெற்று வருவதாக கிடைத்த தகவலுக்கு அமைய பாணந்துறை வடக்கு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அப்பகுதிக்குச் சென்றுள்ளார்.
இதன்போது ஒரு மோட்டார்சைக்கிள் பொலிஸ் வாகனத்தின் மீதும், இன்னுமொரு மோட்டார்சைக்கிள் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மீதும் மோதியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.
விபத்தில் காயமடைந்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் இருவர் உட்பட மூவர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.
சம்பவம் தொடர்பில் பாணந்துறை வடக்கு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-இ)

# இன ரீதியில் காணிகள் ஒதுக்கப்படுவதில்லை

## கிழக்கு ஆளுநர் கூறுகிறார்




**கொழும்பு, ஒக்.16**
**இன அடிப்படையில், காணி எல்லைகளை வரையறுப்பது, அரசாங்கத்தினதோ அல்லது தனதோ கொள்கையல்ல எனத் தெரிவித்துள்ள கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத், சிங்களவர்களுக்கோ, தமிழர்களுக்கோ, முஸ்லிம்களுக்கோ என காணிகள் ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.**

திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் கிழக்கு ஆளுநர் மக்கள் பிரதிநிதிகளைச் சந்தித்தார். இந்தச் சந்திப்பின்போது, கால்நடைகளின் மேய்ச்சலுக்காகப் பயன்படுத்தப்படும் நிலங்களை, விவசாயிகளுக்கு வழங்குவதற்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, கூட்டமைப்பின் எம்.பிக்கள், ஆளுநரிடம் வலியுறுத்தினர். இதற்கு பதிலளித்த ஆளுநர் இனக் குழுக்களை இலக்காகக் கொண்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, ஒருபோதும் நான் நடவடிக்கை எடுக்கப்போவதில்லை, மாகாணத்திலுள்ள அனைத்துக் குடிமக்களுக்கும் சமமாகச் சேவை செய்வதில், நான் உறுதியாக உள்ளேன்.

இந்தப் பிரச்சினையைத் தீர்க்க, அனைத்துத் தரப்பினருடனும் ஒரு சிறப்புக் கலந்துரையாடலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஐ-இ)





## அப்துல் கலாமின் பிறந்த தின நிகழ்வு

கொடிகாமம், ஒக். 16
இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியும், விஞ்ஞானியுமான மறைந்த அப்துல் கலாமின் 89 ஆவது பிறந்த தின நிகழ்வு யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தில் நேற்று நடைபெற்றது.
யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் இந்திய துணைத்தூதுவர் சங்கர் பாலச்சந்திரன், கலாமின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். (ஐ-159)

# வெளிநாட்டு தொழிலாளர்களை உள்வீர்ப்பதற்கு இத்தாலி முடிவு

கொழும்பு, ஒக்.16
8 ஆண்டுகளுக்குப் பிறகு இத்தாலியில் வெளிநாட்டு தொழிலாளர்களை உள்வீர்ப்பதற்கான சுற்றறிக்கை வெளியாகியுள்ளது.
இத்தாலிய உள்துறை அமைச்சு கடந்த 12ஆம் திகதி இந்தச் சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளது. இதன்படி, இலங்கை உள்ளிட்ட 32 நாடுகளின் வெளிநாட்டுத் தொழிலாளர்களை இத்தாலிய ஒப்பந்தக்காரர்கள் பயன்படுத்தலாம்.
இத்தாலிய உள்துறை அமைச்சு வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவிப்பின்படி, இந்த ஒதுக்கீட்டில் ஆறு இத்தாலிய ஒப்பந்தக்காரர்களின் உதவியுடன் கனரக வாகனம், ஹோட்டல், உணவகம் மற்றும் கட்டுமானத் துறைகளுக்கு வெளிநாட்டுத் தொழிலாளர்களை ஈர்க்க முடியும். இதன்மூலம், 2006 முதல் இத்தாலியில் சட்டபூர்வமாக நுழைந்த இலங்கையர்களுக்கு வேலை விசாக்கள் பெற வாய்ப்புக் கிடைத்துள்ளது.
இலங்கை அரசாங்கம் இந்த வேலை வாய்ப்பில் தலையிட முடியாது. இத்தாலியிலுள்ள ஒப்பந்தக்காரர் ஒருவரின் ஒப்புதல் மற்றும் ஸ்பொன்சரின் மூலம் மட்டுமே இலங்கையர் தொழிலுக்காக இத்தாலிக்குச் செல்ல முடியும். இந்தப் பருவத்தின் வேலை ஒதுக்கீட்டிற்கு விண்ணப்பிக்க 18,000 வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஒக்ரோபர் 27 முதல் விண்ணப்பங்கள் ஏற்கப்படும் என்றும் இத்தாலிய உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ-இ)


### வகுப்புகளை நடத்திய

## ஆசிரியர்கள், மாணவர்கள் தனிமைப்படுத்தலில்!

கொழும்பு, ஒக்.16
தனியார் வகுப்புக்களை நடத்திய ஆசிரியர்கள் இருவர் உட்பட 28 மாணவர்களை தனிமைப்படுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் மாளிகாவத்தைப் பகுதியில் இடம்பெற்றது.
நாட்டில் தற்போது வேகமாக அதிகரித்து வரும் கொரோனா வைரஸின் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் வகுப்புகள் பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள், விழாக்கள் மற்றும் கூட்டங்கள் என்பன நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.
இந்த நிலையில் குறித்த தடை உத்தரவை மீறி வகுப்புகளை நடத்திய ஆசிரியர்கள் உட்பட மாணவர்களை தனிமைப்படுத்தலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ஐ-இ)

# ஊவா பல்கலைக்கு விரைவில் மருத்துவபீடம்

கொழும்பு, ஒக்.16
ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்துக்கு மருத்துவபீடமொன்றை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.
கல்வி அமைச்சில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
ஊவா பல்கலைக்கழகத்துக்கு மருத்துவபீடமொன்றை பெற்றுக்கொடுப்பதாயின் அப்பீடத்தின் பிணி ஆய்வு நடவடிக்கைகளுக்காக பதுளை மருத்துவமனையை போதனா மருத்துவமனையாக பயன்படுத்த முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.




அத்துடன் மஹியங்கணை, தியத்தலாவ மற்றும் வெலிமடை ஆகிய மருத்துவமனைகளையும் இதற்கென உள்ளீர்ப்பு செய்ய முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க மற்றும் ஏனைய பல்கலைக்கழகங்களின் மருத்துவ பீட பீடாதிபதிகள் இப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டனர். (ஐ-இ)

## பஸ் மீது கல்வீச்சு

திருகோணமலை, ஒக்.16
திருகோணமலையிலிருந்து மட்டக்களப்பு நோக்கி அரச அதிகாரிகளை ஏற்றிச் சென்ற பஸ் மீது இனந்தெரியாத நபர்களால் கல்வீச்சு நடத்தப்பட்டது.
மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் பகுதியில் வைத்து நேற்று இரவு கல்வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
இந்த பகுதியில் அரச அதிகாரிகளுக்கான பஸ் சேவை அண்மையில் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-இ)

# கைக்குண்டுடன் தம்பதியர் கைது



கொழும்பு, ஒக்.16
அவிசாவளை - மானியங்கம பகுதியில் கைக்குண்டொன்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் தம்பதியர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
சந்தேகத்திற்கிடமான முறையில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றை சோதனைக்கு உட்படுத்தியபோதே குறித்த கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்ட என பொலிஸார் தெரிவித்தனர்.
அவிசாவளை பகுதியைச் சேர்ந்த 38 மற்றும் 28 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.
இந்த நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-இ)


ஊடகவியலாளர்களின் வருகையைக் கண்டு

# கதவை மூடி ஒளிந்துகொண்ட வனவள உத்தியோகத்தர்கள்

## முல்லையில் சம்பவம்

**முல்லைத்தீவு, ஒக்.16**

**முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த திங்களன்று ஊடகவியலாளர்கள் இருவர் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத்தெரிவித்து, வடமாகாணத்தின் அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்களும் நேற்று முல்லைத்தீவில் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.**





ஆர்ப்பாட்டத்தின் முடிவில், ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமையைக் கண்டித்து மாவட்ட வனவள அதிகாரிக்கு மனு ஒன்றைக் கையளிப்பதற்காக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர்கள், முள்ளியவளைப்பகுதியில் அமைந்துள்ள முல்லைத்தீவு மாவட்ட வன அலுவலகத்திற்குச் சென்றிருந்தனர். ஊடகவியலாளர்கள் வருகின்றமையை அறிந்த மாவட்ட வன அலுவலகத்திலிருந்த உத்தியோகத்தர்கள், அலுவலகக் கதவைப் பூட்டியதுடன், அலுவலகத்திற்குள் மறைந்திருந்து ஜன்னல் கண்ணாடி வழியாக வெளியே இருந்த ஊடகவியலாளர்களை ஒளிப்படம் எடுத்துள்ளனர். இதனை அவதானித்த ஊடகவியலாளர்கள் கொதிப்படைந்து உத்தியோகத்தர்களை வெளியேவருமாறு கோசம் எழுப்பினர். இதனையடுத்து அங்கு அலுவலகத்திற்குள் மறைந்திருந்த வன உத்தியோகத்தர்கள் வெளியே வருகைதந்து ஊடகவியலாளர்களிடமிருந்து மனுவைப் பெற்றனர். (ப-246)

---

# தீர்மானத்தை விமர்சிப்பது சபையை அவமதிப்பதாகும்

## சாவ. நகரசபை உறுப்பினர் கவலை

சாவகச்சேரி ஒக். 16

சபையில் உறுப்பினர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டு தீர்மானம் எடுக்கப்பட்டால் அது தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகளை அரச அலுவலர்களே மேற்கொள்ள வேண்டும். நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பாக அடுத்த அமர்வில் விவாதிப்பது சபையை அவமதிப்பது போன்ற செயற்பாடு என்று சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் க.வேலாயுதபிள்ளை தெரிவித்தார்.

சாவகச்சேரி நகரசபையில் நேற்று இடம்பெற்ற அமர்வின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தீர்மானம் எடுப்பதற்காகவே சபை கூடுகிறது. எடுக்கும் தீர்மானத்தை மாற்றம் செய்ய முடியாது. எடுக்கும் தீர்மானங்களை நிறைவேற்ற அரச நிர்வாகம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அரச அலுவலர்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாகக் கேட்கலாமே தவிர மாற்றம் செய்ய விவாதிக்கக் கூடாது. ஆனால் இந்தச் சபையில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் அடுத்தடுத்த அமர்வுகளில் விவாதத்திற்கு உறுப்பினர்களால் எடுத்துக் கொள்ளப்படுவது சபையின் வினைத்திறன் அற்ற செயலே.

சபை அமர்வில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் நூலகங்களில் மக்கள் பார்வைக்காக வைக்கப்படுகின்றன. ஒவ்வொரு மாதமும் ஒரு விடயத்தை விவாதிப்பது நகரின் உயர்சபையாகக் கருதப்படும் இந்தச் சபைக்கு பெரும் அவமானமாகக் கருதுகிறேன் - என்றார். (ப-9)

---

# நுழைவாயில் திறப்பு

கொடிகாமம், ஒக்.16

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்தின் மைதான நுழைவாயில் திறப்பும், அமரர்கள் நடராஜா தங்கேஸ்வரி ஞாபகார்த்த ஞா.பா.ச. சிறுவர் விளையாட்டு முற்றத் திறப்பு விழாவும் இன்று மாலை 5 மணிக்கு ஞா.பா.ச விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனும், அமரர்கள் நடராஜா தங்கேஸ்வரி குடும்பத்தினர் சார்பாக திரு திருமதி சுகர்ணன் கவிதா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண ஆறுதல் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுந்தரம் டிவகலாலா, யாழ். கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம், உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ப-159)

---

# 160 பேருக்கு மின்சாரம்

தென்மராட்சி பிரதேசத்தில் வதியும் மின்சார வசதி இல்லாத வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 160 குடும்பங்களுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கப்படவுள்ளது. இதற்கான நிதியை அரசாங்கம் வழங்கியுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டது. (ப-9)

---

# மரக்கடத்தலை தடுக்காவிடின் இனியும் பொறுமை காக்கோம்!

## வனவள அதிகாரியை எச்சரித்தார் ரவிகரன்

முல்லைத்தீவு, ஒக்.16

மரக்கடத்தலைக் கட்டுப்படுத்துங்கள், இனியும் இவ்வாறான மரக்கடத்தல் செயற்பாடுகளையும், மரக்கடத்தல் காரர்களின் அச்சுறுத்தல் செயற்பாடுகளையும் பார்த்துக்கொண்டு பொறுமையாக இருக்கமுடியாது என்று வடமாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் முல்லைத்தீவு மாவட்ட வனவள அதிகாரியிடம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக இயங்கவேண்டியவர்கள். அவர்களை மரக்கடத்தல்காரர்கள் கடுமையாகத் தாக்கியுள்ளார்கள். இதை ஒருபோதும் எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது. விடுதலைப்புலி களின் காலத்தில் அவர்கள் மரங்களை பெரியளவில் நட்டனர்.

தற்போது மரங்கள் அதிகளவில் வெட்டப்பட்டுக் கடத்தப்படுகின்றன. தாங்கள் பொறுப்பு வாய்ந்த வனத்திணைக்களம் என்றவகையில் இவ்வாறான மரக்கடத்தல் சம்பவங்களை, நிறுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள். இனியும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றால் நாம் பார்த்துக் கொண்டு பொறுமையாக இருக்க முடியாது - என்றார். (ப-246)

---

# பொலிஸாரிடம் சிக்கிய சிலிண்டர் திருடன்

சாவகச்சேரி, ஒக்.16

கடைக்கு பாண் கொடுப்பதற்காக ஓட்டோவில் சென்ற நபர் கடையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த சிலிண்டரைத் திருடிச் சென்றுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மீசாலை பகுதியில் இடம்பெற்றது.

வழமையாக கடைக்கு பாண் கொண்டு வந்து வழங்குபவர் நேற்றுமுன்தினம் பாண் கொண்டுவந்து, கடையினுள் வைத்த வேளையில் வர்த்தகர் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தார்.

சனக்கூட்டம் குறைந்த பின்னர் வெளியே பார்த்தபோது அங்கு வைக்கப்பட்டிருந்த காஸ் சிலிண்டர் காணாமல் போனதை அவதானித்துள்ளார். இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதேவேளை சாவகச்சேரி பகுதியில் உள்ள வீடொன்றில் சிலிண்டர் விற்க முயன்ற வேளையில் சந்தேகம் கொண்ட அயலவர்கள் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். அங்கு விரைந்த பொலிஸார். அந்த நபரிடம் விசாரணைகளை மேற்கொண்ட போது அந்த சிலிண்டரை மீசாலையில் திருடியதெனத் தெரியவந்துள்ளது.

இந்த நபருக்கு எதிராக பொலிஸார் வழக்குப் பதிவு செய்து நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் சந்தேகநபரை பிணையில் செல்ல அனுமதித்தார். (ஐ- 9)

---

# உள்ளூராட்சி சபைகளுக்கு சாரதிகளை நியமியுங்கள்!

## சாவ. நகரசபை உறுப்பினர் ஜெயக்குமார் கோரிக்கை

சாவகச்சேரி, ஒக். 16

உள்ளூராட்சி சபைகளில் வாகனங்கள் இருந்தும் சாரதிகள் இல்லாதமையால், தேவைகள் ஏற்படும்போது, அவற்றைப் பயன்படுத்தமுடியாமல் உள்ளது. உடனடியாக சபைக்குச் சாரதிகளை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் யோ.ஜெயக்குமார் தெரிவித்தார்.

சாவகச்சேரி நகரசபையில் நேற்று இடம்பெற்ற சபை அமர்வின்போது மேலும் தெரிவித்த அவர்;

சபையில் வாகனங்கள் இருந்தும், வாகனங்களுக்குரிய சாரதிகள் இல்லாதமையால், எமது சொந்த வாகனங்களைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. இதனால் உரிய அதிகாரிகளுடன், தொடர்புகொண்டு சபையில் உள்ள வாகனங்களின் எண்ணிக்கைகளுக்கேற்ப சாரதிகளை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

இதற்குப் பதிலளித்த சபையின் செயலர்;

நியமனங்களை வழங்கும் அதிகாரம் மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவிடமே உள்ளது. வடக்கு மாகாணத்தில் மாகாண சபை நிறுவப்பட்ட பின்னர் ஆணைக்குழுவின் சபை கூடி ஒவ்வொரு அலுவலகத்திலும் உள்ள ஆளணிகளின் விவரங்கள் பெறப்பட்டு நியமனங்கள் வழங்கப்பட்டன.

அதன்பின்னர் உள்ளூராட்சி சபைகளுக்கு அரச சார்பற்ற நிறுவனங்களினால் வாகனங்கள் வழங்கப்பட்ட போதிலும் இருக்கும் ஆளணிகளை வைத்து இயங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த மாகாண சபை வந்ததும் மீண்டும் சபை கூடி அலுவலகங்களுக்கு ஆளணி வழங்குவது தொடர்பாகப் பரிசீலனை மேற்கொள்ளும் - என்றார். (ப-9)

# இன்றைய நாள்

**மேடம்:** பணியாளர்களுக்கு உயர்வு கிடைக்கும் நாள். ஆரோக்கியம் மீளும். உயர்ந்த மனிதர்களின் உதவி கிடைக்கும். சுபநிகழ்ச்சிகள் நடக்கும். வெளிநாட்டுத் தொடர்பு மகிழ்ச்சியும், பணமும் தரும்.

**இடபம்:** சுபநிகழ்ச்சி ஏற்பாட்டால் குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும். நண்பர்கள் இடையே இருந்த மனக்கசப்புகள் அகலும். புதிய நட்பால் உற்சாகம் அடைவீர்கள். சேமிப்புக் கூடும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த தொகை கைக்கு வரும். புண்ணியச் செயல் செய்வீர்கள். உழைப்புக் கூடும். வியாபாரத்தில் லாபம் கணிசமாக உயரும். பணியில் சிக்கல்கள் தீரும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**கடகம்:** பணியிடத்தில் அதிகாரிகளுடன் ஈகோ வேண்டாம். திருப்திகரமான நாள். வேலைச்சுமை அதிகம் இருக்கும். குடும்பத்தினர் உங்கள் பேச்சுக்கு மதிப்பளிப்பார்கள்.

**சிம்மம்:** உடல்நலம் மேம்படும். வியாபாரத்தில் பழைய சரக்குகளை விற்பீர்கள். இளைஞர்கள் கடினமான செயல்களையும் எளிதாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாள்கள் ஒத்துழைப்பார்கள்.

**கன்னி:** ஆடை,ஆபரணம்சேரும். தாயாரின் உடன் நிலை நலமடையும். சகஊழியர்களுக்கு உதவுவீர்கள். பிள்ளைகள் உங்கள் மீது பாசமழை பொழிவார்கள். அரசாங்கத்தால் நன்மைகள் உண்டு. வழக்குகள் சாதகமாக முடியும்.

**துலாம்:** உங்களால் பிறர் பயன் அடைவதால் பாராட்டப்படுவீர்கள். பணவரவு உண்டு. உறவினர்கள் உங்களைத் தேடி வருவார்கள். உயரதிகாரி அதிசயிக்கும்படி நடந்து கொள்வீர்கள்.

**விருச்சிகம்:** வெறுத்து ஒதுக்கிய நண்பர்கள் வந்து உதவி கேட்பார்கள். வியாபாரத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். சுற்றி இருப்பவர்களைப் புரிந்து கொள்ளும் வாய்ப்பு வரும்.

**தனுசு:** அக்கம் பக்கத்தினரின் ஆதரவு உண்டு. பெரியோரின் ஆசி கிடைக்கும். அரசியலில் உங்கள் கை ஓங்கும். நட்பால் ஆதாயம் உண்டு . சேமிப்பு பணம் செலவாகும்.

**மகரம்:** கனவு நனவாகும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். இளம் வயதினரின் பல கால முயற்சி வெற்றி பெறும். தொழிலில் எதிர்பார்த்த லாபம் உண்டு. சேமிப்பு அதிகமாகும்.

**கும்பம்:** பணியிடத்தில் திட்டமிட்டவை தடையின்றி முடியும். சிலர் உங்களை சீண்டுவார்கள். வீட்டிலும், பணியிடத்திலும் வளைந்து கொடுக்க வேண்டும்.

**மீனம்:** புது அனுபவம் கிடைத்து வாழ்வில் பாடம் பெறுவீர்கள். எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிக்கும் திறமை பெறுவீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

# பாதுகாப்புத்துறையின் பலவீனமே ஈஸ்டர் தாக்குதலுக்கு காரணம்

## ஆணைக்குழுவில் முன்னாள் பிரதமர் தெரிவிப்பு



**கொழும்பு, ஒக்.16**

**உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாத தாக்குதல் இடம்பெறும்போது நாட்டின் பாதுகாப்புத் துறையில் வீழ்ச்சி காணப்பட்டது என அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி ஆணைக் குழுவில் ஏற்றுக்கொண்டார்.**

ஆணைக்குழுவில் இரண்டாவது நாளாகவும் நேற்றுமுன்தினம் சாட்சியமளித்த முன்னாள் பிரதமர், அரசாங்கம் என்ற வகையில் முன்னைய நல்லாட்சி அரசாங்கத்தில் பல குறைபாடுகளை அவதானிக்க முடிந்தது எனத் தெரிவித்தார். அவர் மேலும் சாட்சியமளிக்கையில்–

ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்றமைக்கான பொறுப்பை அவ்வரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். தேசிய பாதுகாப்பு கவுன்சில் கூட்டங்களுக்கு நாட்டின் பிரதமருக்கு பொதுவாக அழைப்பு விடுப்பார்கள். ஏதோவொரு சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி பதவியில் இடைவெளியேற்பட்டால் பாதுகாப்பு அமைச்சின் பதில் நடவடிக்கைகளை பிரதமர் அறிந்திருக்க வேண்டும்.

நான் பிரதமராக இருந்தபோது இடம்பெற்ற அனைத்து தேசிய பாதுகாப்பு கவுன்சில் கூட்டங்களிலும் கலந்துகொள்ளவில்லை. வாராந்தம் தேசிய பாதுகாப்பு கவுன்சில் கூட்டங்கள் நடைபெறுகின்றமை முக்கியத்துவம் வாய்ந்ததாகும். எனது பொறுப்பிலிருந்த பொருளாதாரக் குழு பிரதிவாரமும் உரிய நாளில் கூடியது. எனினும் பாதுகாப்பு கவுன்சில் கூட் டம் அவ்வாறு கூட்டப்படவில்லை.

2018 ஒக்டோபர் 26 முதல் 2019 ஏப்ரல் 21 ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்ற தினம்வரை, ஜனாதிபதியால் நான்தேசிய பாதுகாப்பு கூட்டத்துக்கு அழைக்கப்படவில்லை. ஏனெனில் 2018 ஒக்டோபர் 26 முதல் டிசம்பர் 16 வரை நான் பிரதமராக இருக்கவில்லை. எனக்கும் ஜனாதிபதிக்கு மிடையில் பெரிய கருத்து முரண்பாடுகள் இருக்கவில்லை.

இருப்பினும் பல தரப்பினருக்கும் ஜனாதிபதிக்கும் இடையே மாறுபட்ட கருத்துக்கள் காணப்பட்டன. தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனக் கூறி இராணுவ அதிகாரிகளால், முஸ்லிம் பெண்கள் அணியும் நிகாபை தடைசெய்ய தேசிய பாதுகாப்பு கவுன்சிலில் யோசனை முன்வைக்கப்பட்டபோது நான் அதனை எதிர்க்கவில்லை. ஆனால் ஜெனரல் கிருஷாந்த டி சில்வா, அந்த யோசனையை முன்வைத்தார்.

அப்படியென்றால் தகவல்கள் வந்திருக்கலாம். எனினும் ஏப்ரல் 21ஆம் திகதி நாட்டில் எட்டு இடங்களில் குண்டுகள் வெடிக்கும் வரை சஹ்ரானின் தாக்குதல் குறித்து சம்பிரதாய முஸ்லிம்களிடம் இருந்து தகவல்கள் எமக்கு கிடைத்தன. தமிழில் இருந்த சஹ்ரானின் உரைகளை நானும் அங்கும் இங்குமாகச் செவிமடுத்திருந்தேன். எனினும் அதற்கு அப்பால் இது தொடர்பாக எமது பாதுகாப்பு தரப்பினரே ஆராய்ந்திருக்க வேண்டும். ஏப்ரல் 21ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் தாக்குதல் ஒன்று இடம்பெறவுள்ளதாக இந்தியாவுக்கு தகவல்கள் கிடைத்த நிலையில், எமக்கு கிடைக்காமல் இருந்தமை எமது குறைபாடு- என்றார். (ந)




இணுவில் – தாவடி எல்லைக்கு உட்பட்ட ஏழு கிராம சேவகர் பிரிவுகளில் வசிக்கும் 200 குடும்பங்களுக்கு, இணுவைக் கந்தன் அறக்கட்டளை நிதியத்தால், 400 தென்னங்கன்றுகளும், வீட்டுத் தோட்டச் செய்கைக்கான விதைப் பொதிகளும் வழங்கப்பட்டன. (க)

## பருவமழைக்காக காத்திருக்கும் துணுக்காய் விவசாயிகள்

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேசத்துக்குட்பட்ட விவசாயிகள் பருவமழையை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

ஒட்டன்குளம், ஆலங்குளம், தென்னியங்குளம், கல்விளான், வேட்டையாமுறிப்பு மற்றும் உயிலங்குளம் ஆகிய கிராமங்களின் வயல் நிலங்கள் நெல் பயிரிடுவதற்குத் தயாராக உழுது விடப்பட்டுள்ள நிலையில், பருவமழை பிந்தியுள்ளதால் நெல் விதைப்பு தடைப்பட்டுள்ளது. (ந-ரி)



# வர்த்தக நிலையங்களில் மக்கள் சமூக இடைவெளியை பின்பற்றுக!

யாழ்ப்பாணம், ஒக்.16

யாழ்ப்பாணத்தில் தற்போது கொரோனாத் தாக்கம் அதிகரித்துள்ளதால் வர்த்தக நிலையங்களில் கட்டாயம் சமூக இடைவெளியை பின்பற்றப்படவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. யாழ்.நகரில் உள்ள சகல வர்த்தக நிலையங்கள் மருந்தகங்களுக்கு வருகை தரும் மக்கள் கட்டாயம் சமூக இடைவெளியைப் பின்பற்றுவதுடன், முகக்கவசம் அணிய வேண்டும். இந்த சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பொருள்களை கொள்வனவு செய்யுமாறு சுகாதாரப் பிரிவினரும், பொலிஸாரும் அறிவுறுத்தி வருகின்றனர். கொரோனாத் தாக்கம் அதிகரித்திருப்பதால் வர்த்தக நிலையங்களுக்கு வருவோர் முண்டியடித்து பொருள்களை வாங்குவதை தவிர்த்து சமூக இடைவெளியைப் பேணவேண்டும் என்றும், மக்களுக்கு தெளிவூட்டி செயற்பட முன்வரவேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ற-17)

# இந்தியா தொடர்ந்து ஆதரவை வழங்கும்

## இந்திய கவுன்சிலர் டிபின் தெரிவிப்பு

**கொழும்பு, ஒக்.16**

**இலங்கையின் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, மொனராகலை ஆகிய மாவட்டங்களில் அபிவிருத்தி முயற்சிகளை மேற்கொள்வதற்கு இந்தியா தொடர்ந்து ஆதரவை வழங்கும் என்று ஊவா மாகாண ஆளுநர் முஸம்மிலிடம், இந்த மாவட்டங்களுக்குப் பொறுப்பான இந்திய நாட்டின் கவுன்சிலர் ஜெனரல் டிபின் தெரிவித்தார்.**

ஊவா மாகாண ஆளுநர் முஸம்மிலுக்கும், இந்திய நாட்டின் கவுன்சிலர் ஜெனரல் டிபினுக்கும் இடையில் விசேட சந்திப்பு ஒன்று ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இரு தரப்பினரும் பரஸ்பரம் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டனர். இதன்போது இலங்கை இந்தியாவுக்கிடையிலான இராஜதந்திர நெறிமுறைகளைப் பின்பற்றி தொடர்ந்தும் உறவை வலுப்படுத்தல் விடயங்களில் இரு நாடுகளும் சேர்ந்து பயணிப்பதற்கான சமிக்ஞையை இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ச மற்றும் இந்தியப் பிரதமர் மோடி ஆகிய இருவருக்குமிடையே ஒன்லைன் காணொலியினூடாக இடம்பெற்ற சந்திப்பு முன்னுரிமைக்குரிய விடயம் என்று இந்தியாவின் கவுன்சிலர் ஜெனரல் டிபின் ஊவா மாகாண ஆளுநர் ஏ. ஜே. எம். முஸம்மிலிடம் தெரிவித்தார். (ற-இ)



கொரோனாத் தடுப்பு தொடர்பில்

# பச்சிலைப்பள்ளி செயலகத்தில் கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஒக்.16

கொரோனாத் தடுப்பு நடவடிக்கை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

நாட்டில் தற்போது மீண்டும் கொரோனாத் தொற்று அதிகரித்துள்ள நிலையில், எமது மாவட்டத்தில் இதுவரை அவ்வாறான நிலை இல்லாதபோதும் அதைத் தடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

பிரதேச சபை மூலம் மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். அத்துடன் கடைகளில் கை கழுவுதற்கான வசதிகள், சமூக இடைவெளி பேணுவதற்கு கோடுகள் வரைதல், முகக்கவசம் அணிதல் போன்றவை பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படும்.

அத்துடன் இதை திணைக்களங்களிலும் நடைமுறைப்படுத்துவதற்கு அந்தந்த திணைக்களத் தலைவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பில் கிராம சேவகர்கள் தமது கிராமங்களில் சிறப்புக்குழு ஒன்றை அமைத்து இது தொடர்பான தகவல்களைப் பெற அவர்களைத் தொடர்ச்சியாக செயல்படுத்த வேண்டும் என்று பச்சிலைப்பள்ளிபிரதேச செயலாளர் மேலும் தெரிவித்தார். (ற-6)

# இயக்கச்சியில் 16 பேருக்கு கொரோனா

கிளிநொச்சி, ஒக்.16

இயக்கச்சி தனிமைப்படுத்தல் நிலையத்தில், தனிமைப்படுத்தப்பட்டவர்களில் நேற்றுமுன்தினம் வரை 16 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டத்திலிருந்து 166 பேர் அழைத்து வரப்பட்டு தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர். இவர்களில் இதுவரை 16 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இவ்வாறு அழைத்து வரப்பட்டவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 15 வயது சிறுமி அடையாளம் காணப்பட்டு, அவர் அங்கிருந்து மறுநாள் சிகிச்சைக்கு அனுப்பப்பட்டார்.


இதுவரை 159 பேரிடம் பெறப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் 16 பேர் தொற்றுக்குள்ளானவர்கள் என்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். இன்னும் 6 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

அடையாளம் காணப்பட்ட அனைவரையும் சிகிச்சைக்காக அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ற-6)



# விசேட டெங்குக் கட்டுப்பாடு: 630 இடங்கள் சோதனை

யாழ்ப்பாணம், ஒக்.16



யாழ்.மாநகர பிரதேசத்தில் ஆரம்பமான விசேட டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையின் போது 630 இடங்கள் நேற்று மட்டும் சோதனையிடப்பட்டன.

இந்த சோதனை நடவடிக்கை யாழ்.நகரின் ஜே/73, ஜே/75, ஜே/78 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் இடம்பெற்றன. இதன்போது எட்டு இடங்களில் நுளம்புக் குடம்பிகள் இருக்கின்றமை கண்டுபிடிக்கப்பட்டதுடன், அந்த குடியிருப்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

இந்த சோதனையின்போது போதிய சுகாதார விதிகள் இன்றி காணப்பட்ட 30 குடியிருப்புகளுக்கு உடனடியாக சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டது.

இந்த சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டு ஒரு வார காலத்துக்குள் குடியிருப்புகள் யாவும் உடனடியாக துப்புரவு செய்யப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

இந்தச் செயற்பாடுகளுக்கு பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (ற-17)

# சட்டவிரோத செயற்பாடுகளை அறிவியுங்கள்!

*பொலிஸார் மக்களிடம் வேண்டுகோள்*

சாவகச்சேரி, ஒக்.16

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்கள் சட்டவிரோத செயற்பாடுகள் மற்றும் அவசிய தேவைகள் ஏற்பட்டால் பொலிஸ் நிலையத்தின் தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு சாவகச்சேரி பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸாரால் துண்டுப் பிரசுரங்கள் நேற்று முன்தினம் விநியோகிக்கப்பட்டன. (ற-9)

# சுத்தம் செய்யப்பட்டது வட்டுவாகல் களப்பு

முல்லைத்தீவு, ஒக்.16

முல்லைத்தீவு வட்டுவாகல் நந்திக் கடல் ஆற்றுப்பகுதி 2 இலட்சம் ரூபா செலவில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை சுத்தம் செய்யப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் களப்புக்கள் எவையும் அபிவிருத்தி செய்யப்படாத நிலையில், வட்டுவாகல் களப்புப் பகுதி சுத்தம் செய்யப்பட்டுள்ளது.

வட்டுவாகல் நந்திக்கடல் ஆற்றுப்பகுதியை ஆழப்படுத்துமாறு கடற்றொழிலாளர்கள் பல தடவைகள் கோரிக்கை விடுத்துள்ள நிலையில், கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ், வட்டுவாகல் கிராமிய கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமையில் இந்தக் களப்புப் பகுதி சுத்தம் செய்யப்பட்டது.

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் க.விமலநாதனால் ஆரம்பிக்கப்பட்ட இந்த நடவடிக்கை, செல்வபுரம் மற்றும் கோயிற்குடியிருப்பு ஆகிய கிராமிய கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்கள் நந்திக்கடல் களப்பின் நீரோட்டத்துக்கு தடையாகவுள்ள வட்டுவாகல் பாலத்தின் கீழ் உள்ள கற்களை அகற்றி சுத்தப்படுத்தப்பட்டது. (ற-19)

# நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஒக்.16

யாழ்ப்பாணம் சித்த மருந்துகள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் நடத்திய நடமாடும் சேவை கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இந்த நடமாடும் சேவை கோண்டாவில் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க அனுசரணையுடன், கோண்டாவில் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் அ.சின்னராஜா தலைமையில் இடம்பெற்றது.

இந்த நடமாடும் சேவையில், சங்க அங்கத்தவர்கள், பணியாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-63)

# கோரிக்கைகளை ஏற்று ‘20’ஐ கைவிடுங்கள்!

## மேல் மாகாணசபை முன்னாள் உறுப்பினர் கலாநிதி நல்லையா குமரகுருபரன் வேண்டுகோள்

கொழும்பு, ஒக்.16

**அதி உயர் பௌத்த பீடங்களான அஸ்கிரிய அமரபுர நிக்காய, இராமன்ய நிக்காய மற்றும் கத்தோலிக்க ஆயர்களின் பேரவை ஆகியவற்றின் கோரிக்கைகளை ஏற்று 20 ஆவது திருத்தத்தை அரசாங்கம் கைவிடலாம் என தமிழ்த் தேசிய பணி குழுமத்தின் தலைவரும் மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான கலாநிதி நல்லையா குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.**

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரபல ஜனாதிபதி சட்டத்தரணிகளின் அர்த்தமுள்ள வாதங்களையும் கருத்தில் எடுக்க வேண்டும். எழுதப்படாத அரசமைப்பைக் கொண்ட பிரித்தானிய தேசம் ஒற்றையாட்சியிலும் சிறந்த அதிகார பரவலாக்கலை செய்திருக்கும் வரலாற்றை பாராட்டியாக வேண்டும். சுயாதீன ஆணைக்குழுக்களை இல்லாது செய்வது ஜனநாயக விழுமியங்களை கேள்விக்குறியாக்கும். 20 ஆவது திருத்தம் ஓர் அடிமை சாசனம். இதனை ஆதரிப்பது வரலாற்று துரோகம் என ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் கூறியிருக்கின்றமையை எண்ணிப்பார்க்க வேண்டியுள்ளது.

நாட்டில் இருக்கும் ஒரே வாய்ப்பு நீதிமன்ற சுயாதீனம். இதைப்பற்றி நாம் பெருமைகொள்ள வேண்டும் . இதனை 20 கேள்விக்குறியாக்கி விடுமோ என்னும் அச்சம் மக்களிடையே வர இடமளிக்கக்கூடாது.

தமிழ் - முஸ்லிம் மக்களின் ஏற்றுக்கொள்ளக்கூடிய சட்டரீதியிலான அபிலாசைகளை உள்ளடக்கிய அதிகார பரவலாக்கலை ஊர்ஜிதப்படுத்தக்கூடிய புதிய அரசமைப்பு வரவேற்கத்தக்கதே. 13வது திருத்தம் வலியுறுத்தும் அதிகார பரவலாக்கல் அற்றுப்போகையில் இந்தியாவும் ராஜீவ் காந்தியும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும் பெற்றுத்தந்த 13வது திருத்தம் தந்த அதிகார பரவலாக்கலின் முதற் புள்ளியை - பிள்ளையார் சுழியை 20 இல் அல்லது புதிய அரசமைப்பில் அதிகார பரவலாக்கல் எதுவுமின்றி கைவிடலாமா எனும் நிலைமை ஆபத்தானது என மேல் மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் கலாநிதி நல்லையா குமரகுருபரன் தெரிவித்துள்ளார். (ந)



## சி.க.கூ. சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டம்

கிளிநொச்சி, ஒக்.16

கனகராயன்குளம் வடக்கு சிக்கன கடன் கூட்டுறவு சங்கத்தின் வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் சங்கத்தின் தலைவர் ச. கணேசதாஸ் தலைமையில் கனகராயன்குளம் பால் சேகரிப்பு நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது சங்கத்தின் புதிய நிர்வாகசபைத் தெரிவு இடம்பெற்றது. சங்கத்தின் புதிய தலைவராக ஜெ. ஶ்ரீரங்கநாதன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இக் கூட்டத்துக்குப் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட சி.க.கூ. சங்க சமாசத்தின் தலைவர் அ.ச. பாரதி ஆனந்தம் கலந்துகொண்டார்.

அத்துடன் ஓய்வுபெற்ற கிராம சேவையாளரும் , சங்கத்தின் அங்கத்தவருமாகிய தற்போதைய வவுனியா வடக்கு பிரதேச சபையின் தவிசாளருமாகிய ச.தணிகாசலம், வடக்கு மாகாண சி.க.கூ. சங்க சமாசங்களின் சம்மேளன செயலாளர் திருமதி ச. பரமானந்தன், சமாசத்தின் செயலாளர் நி. சுரேஸ், உள்ளகக் கணக்காய்வாளர் ந.நந்தகுமார், வெளிக்கள அலுவலர்கள் மற்றும் சங்கத்தின் அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர். (ந-222)

## இராணுவத்தினருக்கு நெல் கையளிப்பு

கிளிநொச்சி, ஒக்.16

துரு மிதுரு - என்ற புதிய நாட்டுக்கான பசுமை திட்டத்தின் கீழ் அறுவடை செய்யப்பட்ட ஒரு தொகை நெல் இராணுவ வீரர்களின் பயன்பாட்டுக்கு கையளிக்கப்படவுள்ளது.

துரு மிதுரு என்ற புதிய நாட்டுக்கான பசுமை திட்டத்திற்கு அமைவாக கைவிடப்பட்டிருந்த வயல் நிலங்களில் உற்பத்தியை மேற்கொள்ளும் வேலைத்திட்டத்தை வெற்றிபெறச் செய்வதற்கு இராணுவ விவசாய மற்றும் கால்நடை பணிப்பாளர் சபையினால் இராணுவ விவசாயப் பண்ணை நிலங்களில் மீண்டும் உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்கீழ் பெறப்பட்ட அறுவடை நியாயமான விலையின் கீழ் இராணுவ வீரர்களுக்கு வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்துக்கு உட்பட்ட அக்கராயன் பிரதேசத்தில் கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள கிராமங்களுக்கு கரைச்சி பிரதேச சபையினரால் விநாயகர் குடியிருப்பு, கரிதாஸ் குடியிருப்பு, கெங்காதரன் குடியிருப்பு. மணியங்குளம், ஒன்பதாம் கட்டை மற்றும் ஆனைவிழுந்தான் ஆகிய கிராமங்களுக்கு பவுசர் மூலம் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. (ந-ரி)

## மத்துகம நகரில் மூவருக்கு கொரோனா

கொழும்பு, ஒக்.16

மத்துகம நகரை அண்மித்த பகுதிகளில் மூவர், கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என வலலாவிட்ட பொது சுகாதார அதிகாரிகள் காரியாலயம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, யட்டதொல பதுகமை தனியார் பஸ்ஸின் சாரதி ஒருவருக்கும் அதன் நடத்துநருக்கும் கொரோனாத் தொற்று உறுதியானதைத் தொடர்ந்து, களுத்துறை நாகொடை பொது வைத்தியசாலையில் அவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ந)

## வத்தளை பகுதியிலும் 18 பேருக்குத் தொற்று

கொழும்பு, ஒக்.16

வத்தளை சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுக்குட்பட்ட 4 பிரதேசங்களில் 18 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என, வத்தளை சுகாதார வைத்திய அதிகாரி ஏ.எசுன்டா தெரிவித்துள்ளார்.

இவர்களுள் 9 பேர் பிரண்டிக்ஸ் நிறுவனத்தில் பணிபுரிந்தவர்கள், ஏனைய 9 பேரும் கொரோனாத் தொற்றாளர்களுடன் நெருங்கிப் பழகியவர்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வத்தளை, கெரவலப்பிட்டிய, பலகல, ஹேகித்த மற்றும் வெலிசற ஆகிய பிரதேசங்களிலுள்ள 18 பேரே கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் எனத் தெரிவித்த அவர், கெரவலப்பிட்டிய பிரதேசத்தில் 8 குடும்பங்களைச் சேர்ந்த 52 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார். (ந-இ)



## வெளியானது வெல்லஸ்ஸ மாணவர்களின் பி.சி.ஆர்.

சாவகச்சேரி ஒக்.16

அண்மையில் விடுமுறையில் தென்மராட்சி பிரதேசத்திற்கு வந்த ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக மாணவர்கள் 14 பேருக்கு கொரோனாத் தொற்று இல்லையென பரிசோதனையில் வெளியாகியுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் ஏற்பட்ட கொரோனாத் தொற்று காரணமாக சொந்த ஊருக்கு வந்திருந்த வேளையில் மாணவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

இவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று ஏற்படவில்லையென நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளது என மாணவர்களின் பெற்றோர்கள் தெரிவித்தனர். (ந-9)

## பொரளையில் பி.சி.ஆர். சோதனை

பொரளை, ஒக்.16

பொரளையில் மூடப்பட்ட கடைகளின் உரிமையாளர்கள் மற்றும் ஊழியர் உள்ளிட்டோருக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

இந்த முடிவுகளின் அடிப்படையில் அவர்கள் யாரும் தொற்றுக்கு உள்ளாகவில்லை என கொழும்பு மாநகர சபையின் பிரதம வைத்திய அதிகாரி வைத்தியர் ருவன் விஜேமுனி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்; “மினுவங்கொட தொற்றுக்கு பின்னர் கடந்த 8 நாள்களில் கொழும்பில் 2 ஆயிரத்து 584 பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பி.சி.ஆர். பரிசோதனைகளை விஸ்தரிப்பதன் மூலம் எமது பிரதான இலக்காக இருப்பது சமூகத்தில் தொற்று பரவியுள்ளதா என்பதை இனங்காண்பதாகும். எனினும் நேற்றுமுன்தினம் புதன்கிழமை வரை கொழும்பில் 11 தொற்றாளர்கள் மாத்திரமே இனங்காணப்பட்டனர். இவர்கள் அனைவரும் மினுவங்கொட ஆடை தொழிற்சாலை தொற்றுடன் தொடர்புடையவர்களாவர் - என்றார். (ந-இ)



## பனம் விதைகள் நடும் திட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.16
உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு மானிப்பாய் அஞ்சல் சமூகத்தினரின் ஏற்பாட்டில் வழுக்கையாற்றின் கரைப் பகுதியில் 500 பனம் விதைகள் நடும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்.பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.என்.ஜி.ஏ.சுவர்ணசிங்க தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நவாலி வடக்கு கிராம உத்தியோகத்தர் சஜீவன் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ப)

## கண்காணிக்கப்படுகிறது பரீட்சை நிலையங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.16
யாழ்.மாநகர பிரதேசத்தில் இயங்கும், க.பொ.த.உயர்தரப் பரீட்சைகள் நடைபெறும் பரீட்சை நிலையங்கள் யாவும் சுகாதாரப் பிரிவினரால் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

பரீட்சை நிலையங்களுக்கு மீண்டும் ஒரு தடவை தொற்று நீக்கும் மருந்து வீசிறப்படவுள்ளதோடு, மாலையில் புகை அடிக்கும் பணியும் முன்னெடுக்கப்படவுள்ளது.

பரீட்சை நிலையங்களில் நுளம்புகளின்தொல்லைகள் இருந்தால் உடனடியாகப் புகை அடிக்கப்படும் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (ப-17)

## நீதி அமைச்சுக்கு புதிய அலுவலகம்

கொழும்பு, ஒக். 16
நீதியை நிலைநாட்டும் நடைமுறையை செயற்றிறன் மிக்கதாகவும், துரிதமானதாகவும் மாற்றுவதற்காக செயற்றிட்ட முகாமைத்துவ அலுவலகம் ஸ்தாபிக்கப்படவுள்ளது.

இதற்காக நீதியமைச்சர் அலி சப்ரி தாக்கல் செய்த அமைச்சரவைப் பத்திரத்திற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. நீதித்துறையில் நிலவும் பிரச்சினைகளை மூன்று வருடங்களுக்குள் தீர்த்து, தேவையான திருத்தங்களை மேற்கொள்ள அமைச்சர் ஐந்து குழுக்களைநியமித்துள்ளார். இந்தக் குழுக்களின் தலைவர்கள் மற்றும் ஆலோசகர்களுக்கு நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்ச்சி நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

நீதிமன்றங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல், குற்றவியல் சட்டங்களை திருத்தியமைத்தல், நீதிமன்ற வலைப்பின்னலை டிஜிற்றல் மயமாக்கல், வணிக மற்றும்சிவில் சட்டங்களைத் திருத்துதல் போன்ற பொறுப்புக்கள் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ப-இ)

# ரிஷாத் பதியுதீனுக்கு பதிலாக என்னைச் சிறைப்படுத்துங்கள்

## கிண்ணியா நகரசபை உறுப்பினர் ஆதங்கம்

**திருகோணமலை, ஒக். 16**
**ரிஷாத் மீதான கெடுபிடியைத் தளர்த்தி, அவருக்குப் பதிலாக என்னைச் சிறைப்படுத்துங்கள் என்று கிண்ணியா நகர சபை உறுப்பினர் எம்.எம்.மஹ்றி தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

தங்களது பதவிக்காகவும், இருப்புக்காகவும் சிறுபான்மைச் சமூகத்தினரை இலக்கு வைத்துப் பிழைப்பு நடத்தும் வங்குரோத்து அரசியல் நிகழ்ச்சி நிரல் இந்த ஜனநாயக நாட்டில் இல்லாதொழிக்கப்பட வேண்டும். தங்களுக்கு ஆதரவு வழங்கவில்லை என்ற ஒரே காரணத்திற்காக நிரபராதிகளையும் கட்சித்தலைவர்களையும் சிறைப்படுத்தி குற்றவாளியாக்க முனைவது எதிர்காலத்தில் ஒரு மோசமான அரசியல் கலாசாரத்தை அறிமுகப் படுத்தக்கூடிய அபாயத்தை உண்டுபண்ணக்கூடும் என நான் கவலைப்படுகிறேன்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசியத்தலைவரும் முன்னாள் அமைச்சருமான கௌரவ றிஷாட் பதியுதீன் மீது கடந்த காலங்களில் பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தபோதும் அவை அனைத்துக்கும் எதிராக உரிய விசாரணைகள் நடத்தப்பட்டிருந்தன. குற்றப் புலனாய்வுத் திணைக்களமோ, பொலிஸ் திணைக்களமோ, ஆணைக்குழுக்களோ இதுவரை அவரைக் குற்றவாளியாகக் காணவில்லை.

இவ்வாறான நிலையில் அவரையும் அவரது குடும்பத்தாரையும் வேண்டுமென்றே இன்னல்களுக்கு உள்ளாக்குவதும் அவர்களைக் கைது செய்ய முயற்சிப்பதும் ஒருவகை அச்சத்தையும் சந்தேகத்தையும் ஏற்படுத்துகிறது. அனைத்து சட்ட நடவடிக்கைகளுக்கும், விசாரணைகளுக்கும் பூரணமாக ஒத்துழைப்பை வழங்கி வரும் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனையும், அவரது குடும்பத்தாரையும் எந்த ஒரு அடிப்படையோ அல்லது குற்றச்சாட்டுகளோ நிரூபிக்கப்படாமல் தொடர்ந்தும் இன்னல்களுக்கு உட்படுத்துவதை எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றார். (ப-இ)





கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச சபையால், கொரோனா விழிப்புணர்வுச் செயற்திட்டங்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சு.சுரேன் தலைமையில் முன்னெடுக்கப்பட்டன. இதில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் செயலர், உபதவிசாளர் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (ப-159)

## கொரோனா சிகிச்சைக்கு

### 168 படுக்கைகளே இருப்பில் உள்ளன

கொழும்பு, ஒக்.16
கொரோனாத் தொற்றாளர்களுக்குச் சிகிச்சையளிக்க நாடு முழுவதும் உள்ள 12 வைத்தியசாலைகளில் 168 படுக்கைகள் மாத்திரம் எஞ்சியுள்ளன என்று கொவிட்-19 தடுப்புக்கான செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

நேற்று அதிகாலை 5 மணிவரையான தரவுகளை அடிப்படையாகக் கொண்டே கொவிட் 19 தடுப்புக்கான செயற்பாட்டு மையம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

மினுவாங்கொடை கொவிட்-19 கொத்தணிப் பரவலின் விளைவாக வைத்தியசாலைகளில் இவ்வாறு படுக்கைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளன. இதற்கிடையில் கொரோனா நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்கும் திறனை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சகம் அறிவித்துள்ளது. (ப-இ)



## சாவகச்சேரியில் இருவர் ஹெரொய்னுடன் கைது

சாவகச்சேரி,ஒக்.16
வழக்குடன் தொடர்புபட்டு தலைமறைவாக இருந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட நபர் உள்ளிட்ட இருவர் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த ஜூலை மாதம் சாவகச்சேரி, கல்வயல் கிராம அலுவலரின் அலுவலகத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாகத் தேடப்பட்டு வந்தவரே நேற்று முன்தினம் ஹெரோய்னுடன் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த மூன்று மாதங்களாக பொலிஸாருக்கு டிமிக்கி கொடுத்து தலைமறைவாக இருந்த அவர் நேற்றுமுன்தினம் கல்வயல் பகுதியில் நடமாடுகிறார் என்று கிடைத்த தகவலையடுத்து அங்கு சென்று மறைந்திருந்த பொலிஸார் மோட்டார் சைக்கிளில் இன்னொருவருடன் வந்தபோது கைதுசெய்தனர். இருவரையும் சோதனையிட்டனர். அவர்களிடமிருந்து 36 மில்லிகிராம், 32 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப் பொருள் மீட்கப்பட்டது. இருவரும் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனா. தலா ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான பிணையில் இருவரும் விடுவிக்கப்பட்டனர். (ப-9)

## பல்கலைகழகங்களிலும் பி.சி.ஆர். சோதனை

### நேற்று முதல் ஆரம்பம்

கொழும்பு, ஒக்.16
பல்கலைக்கழகங்களில் பி.சி.ஆர் பரிசோதனைகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுகாதார அமைச்சின் செயலரினால் எழுத்து மூலம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கை தொடர்பில், அனைத்துப் பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. அனைவரும் அதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர். இதற்கமைய நேற்று முதல் ஸ்ரீ ஜெயவர்தனபுர, கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட பல்கலைக்கழகங்களில் பி.சி. ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன-என்றார். (ப-இ)

*கொழும்பு-யாழ்*

# குளிரூட்டி ரயில் சேவையை முற்கூட்டியே ஆரம்பியுங்கள்!

*பயணிகள் கோரிக்கை*



கொடிகாமம்,ஒக். 16
கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் குளிரூட்டி ரயில் சேவையை இரண்டு மணித்தியாலங்களுக்கு முன்பாக சேவையில் ஈடுபடுத்துமாறு பயணிகள் கோரியுள்ளனர்

இந்த ரயில் பிற்பகல் 3.45 மணிக்கு கொழும்பில் இருந்து புறப்படுவதால் யாழ்ப்பாணம் வந்து சேர நள்ளிரவாகிறது. தொடர்ந்து தமது சொந்த இருப்பிடங்களுக்குச் செல்வதற்கு அதிக கட்டணம் செலுத்தி வாகனங்களில் செல்ல வேண்டியுள்ளது என்று பயணிகள் தெரிவித்தனர்.

மேலும் இந்த சேவையை கொழும்பில் இருந்து மதியம் ஒரு மணிக்கு சேவையில் ஈடுபடுத்தினால் யாழ்ப்பாணம் செல்லும் மக்களுக்கு ஏனைய தொடர் சேவைகளைப் பெறுவதற்கு வசதியாக இருக்கும் அல்லது முன்னரைப் போன்று நண்பகல் 12 மணிக்கு புறப்பட்ட உத்தரதேவி சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறும் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஜ-159 ,9)

# கொரோனா விதிமுறைகளை மீறுவோர் மீது சட்டம் பாயும்

*மட்டு. பிரதேச செயலகத்தில் தீர்மானம்*

மட்டக்களப்பு, ஒக்.16

**கொரோனாத் தொற்றுத் தொடர்பான விதிமுறைகளைப் பின்பற்றாதோருக்கு சட்ட நடவடிக்கைகளை முறையாக நடைமுறைப்படுத்துவது என்று மட்டக்களப்பு மாவட்டச் செயலர் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் அனர்த்தங்கள் ஏற்படும் போது நடைமுறைப்படுத்த உள்ள முன்னேற்பாடுகள் தொடர்பான விசேட மாநாடு நேற்று பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன்போதே குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வெள்ள அனர்த்தம், டெங்கு நோய், மற்றும் கொரோனாத் தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாத்துக் கொள்வது தொடர்பாக கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. டெங்கு நோய் விழிப்புணர்வு நடவடிக்கையில் பிரதேச சபையும் பிரதேச செயலகமும் இணைந்து சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்துடன் செயல்படுவது என்றும் கொரோனாத் தொற்றுத் தொடர்பான விதிமுறைகளை பின்பற்றாதோருக்கு சட்ட நடவடிக்கைகளை முறையாக நடைமுறைப்படுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் ஏ.சி அஹமட் அப்கர் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் ஓட்டமாவடி பிரதேச சபைத் தவிசாளர் ஏ.எம்.நௌபர் ஓட்டமாவடி சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் எம்.எச்.எம்.தாரிக், மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அதிகாரி ஏ.எஸ்.எம்.சியாத், வாழைச்சேனை பிரதேசத்திற்கான உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜி.சி.என்.ஜயசுந்தர, ஓட்டமாவடி மிருக வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.சுரேந்திரன் வாழைச்சேனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஓட்டமாவடி பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் எஸ்.ஏ.ரியாஸ், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பிரதேச பாடசாலை அதிபர்கள் சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பள்ளிவாயல் நிர்வாகிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-150)

*நியூ டயமன்ட்*

# கப்பலின் உரிமையாளருக்கு 12 மில்லியன் ரூபா தண்டம்



கொழும்பு,ஒக்.16
இலங்கையின் கிழக்கு கடற்பரப்பில் தீப்பற்றிய நியூ டயமன்ட் கப்பலின் உரிமையாளரிடமிருந்து, 12 மில்லியன் ரூபா தண்டமாக அறவிடப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்றத்தால் இந்தத் தண்டம் அறவிடப்பட்டுள்ளது.

கடல் சுற்றாடல் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் முன்வைக்கப்பட்ட தீப்பரவலைத் தடுக்காமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளை,கப்பலின் மாலுமி ஏற்றுக்கொண்டுள்ளதால், இந்தத் தண்டம் அறவிடப்பட்டுள்ளது.

அத்துடன், இந்தக் கப்பலுக்குரிய நிறுவனத்திடமிருந்து 200 மில்லியன் ரூபா நஷ்டஈட்டை எதிர்பார்க்கின்றோம் என்று சட்டமா அதிபர் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளார். (க-இ)

# கழிவுக் கொள்கலன்கள் மீண்டும் பிரிட்டனுக்கு!

*நீதிமன்று உத்தரவு*



கொழும்பு, ஒக்.16
பிரிட்டனில் இருந்து நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட கழிவுகள் அடங்கிய 242 கொள்கலன்களைத் திருப்பி அனுப்புமாறு மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

இந்தக் கொள்கலன்கள் பிரிட்டனில் இருந்து 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் சட்ட விரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருந்தன. இந்தக் கொள்கலன்களில் 130 கொள்கலன்கள் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்திலும், 133 கொள்கலன்கள் கொழும்பு துறைமுகத்தின் முனையம் ஒன்றிலும் சேமிக்கப்பட்டிருந்தன. இந்த விடயம் வெளியாகி சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில், அவற்றில் 21 கொள்கலன்கள் பிரிட்டனுக்குத் திருப்பி அனுப்பப்பட்டன.

இந்தக் கொள்கலன்கள் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டதன் ஊடாக ஏற்பட்ட பாதிப்புகளுக்காக இலங்கை அரசு, சம்பந்தப்பட்ட பிரிட்டன் நிறுவனத்திடம் 1.69 பில்லியன் ரூபா இழப்பீடு கோரியிருந்தது. தற்போது அனைத்துக் கொள்கலன்களையும் திருப்பி அனுப்புமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (எ-இ)

# கம்பஹா செல்லும் சுகாதார பரிசோதகர்கள்

கொழும்பு, ஒக்.16
கம்பஹா மாவட்டத்தில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு உதவுவதற்கு ஏனைய மாவட்டங்களிலிருந்து அதிகளவான பொது சுகாதாரப் பரிசோதகர்கள் அனுப்பப்படவுள்ளனர்.

கம்பஹா மாவட்டத்தில் கொரோனா தனிமைப்படுத்தல் முயற்சிகளை அதிகரிப்பதை நோக்கமாகக்கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் மகேந்திர பாலசூரிய தெரிவித்துள்ளார். அதன்படி கேகாலை, குருநாகல், புத்தளம் மற்றும் கொழும்பு மாவட்டங்களிலிருந்து கம்பஹாவுக்கு 50 க்கும் மேற்பட்ட அதிகாரிகள் அனுப்பப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ப-இ)

# பஸ் மீது கல்வீச்சு

யாழ்ப்பாணம், ஒக்.16
யாழ்ப்பாணம் - முல்லைத்தீவு மாவட்டங்களுக்கிடையிலான பயணிகள் சேவையில் ஈடுபட்டிருந்த தனியார் பஸ் மீது நேற்று நண்பகல் பன்னிரண்டு மணியளவில் கைவேலிப் பகுதியில் வைத்து கல்வீச்சு நடத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு நோக்கிப் பயணிகளை ஏற்றிவந்த பஸ்மீதே கல்வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் பஸ்ஸின் கண்ணாடிகள் உடைந்து சேதத்திற்குள்ளாகியுள்ளன. தனியார் பஸ்ஸின் இரண்டு சாரதிகளுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடே இந்தக் கல்வீச்சுத் தாக்குதலுக்கான காரணம் என தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. (ப-ரி1)

# ஹெரோய்னுடன் ஒருவர் கைது



வவுனியா,ஒக்.16
ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில், ஒருவரைக் கைதுசெய்துள்ளார்கள் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா பழைய பஸ் நிலையத்தில் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொலிஸார் சந்தேகத்திற்கிடமான முறையில் நின்ற நபரைச் சோதனையிட்டனர். இதன்போது அவரது உடைமையில் 100 மில்லிக் கிராம் ஹெரோய்ன் போதைப் பொருள் இருப்பதை அவதானித்ததுடன், குறித்த நபரைக் கைதுசெய்து பொலிஸ் நிலையம் அழைத்து வந்தனர் என்று தெரிவித்தனர். அவுசதபிட்டிய பகுதியைச் சேர்ந்த 31 வயது இளைஞரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். (ப-110)





வடக்கு மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின், 34 லட்சத்து 63 ஆயிரம் ரூபா நிதியில் நிர்மாணிக்கப்பட்ட மன்னார் பிரதேச சபை மண்டபம் நேற்றுத் திறக்கப்பட்டது. இதன்போது சபை உறுப்பினர்களின் பெயர்ப் பலகையும் திறந்து வைக்கப்பட்டது. (ப-60)

# மின்னல் வேகப் பந்து

## கார்டிக் ரைகி சாதனை

புதுடில்லி, ஒக்.16
ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கு எதிரான போட்டியில், டெல்லி கபிட்டல்ஸ் அணியின் வேகப் பந்து வீச்சாளர் கார்டிக் ரைகி 156.2 கிலோ மீற்றர் வேகத்தில் பந்து வீசிச் சாதனைப்படைத்துள்ளார்.
டுபாய் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில், ராஜஸ்தான் றோயல்ஸ் அணியை எதிர்கொண்ட, டெல்லி கபிட்டல்ஸ் அணி13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. போட்டியில் டெல்லி கபிட்டல்ஸ் அணி வெற்றி பெறுவதற்கு, அந்த அணியின் வேகப் பந்துவீச்சாளர்கள் முக்கிய காரணமாக இருந்துள்ளனர்.



இந்தப் போட்டியில் டெல்லி அணி வேகப்பந்து வீச்சாளர் கார்டிக் ரைகி புயல் வேகத்தில் பந்து வீசினார்.
அவர் ஒரு பந்தை மணிக்கு 156.2 கிலோ மீற்றர் வேகத்தில் வீசினார். ஐ.பி.எல் கிரிக்கெட்டில் 2012 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அதிக வேகத்தில் வீசப்பட்ட பந்து இதுவாகும். இவர் 4 பந்தில் 33 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து 2 இலக்குகளை வீழ்த்தி ஆட்ட நாயகன் விருதைத் தட்டிச் சென்றார்.(ற)

## டெஸ்ட் இறுதிப்போட்டி திட்டமிட்டபடி நடக்கும்

டுபாய், ஒக்.16
டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டி திட்டமிட்டபடி அடுத்த ஆண்டு ஜுன் மாதம் லண்டனில் நடத்தப்படும் என்று சர்வதேச கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.
உலக டெஸ்ட் கிரிக்கெட் சம்பியன்ஷிப் போட்டி 9 அணிகள் இடையே நடைபெற்று வருகிறது.
இந்த டெஸ்ட் தொடர்கள் டெஸ்ட் சம்பியன்ஷிப்பில் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு அதன் முடிவுக்கு ஏற்ப புள்ளிகள் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு அணிகளும் 6 தொடர்களில் விளையாட வேண்டும். இதுவரை 4 தொடர்களில் ஆடியுள்ள இந்திய அணி 360 புள்ளிகளுடன் முதலிடத்திலும், ஆஸ்திரேலியா 296 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்திலும், இங்கிலாந்து 292 புள்ளிகளுடன் 3 ஆவது இடத்திலும் உள்ளன. கொரோனா அச்சத்தால் பல போட்டிகள் ரத்து செய்யப்பட்டும், சில தொடர்கள் தள்ளி வைக்கப்பட்டும் உள்ளன. இதனால் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியை ஒத்தி வைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையில், திட்டமிட்டபடி அடுத்த ஆண்டு ஜுன் மாதம் லண்டனில் இறுதிப்போட்டி நடத்தப்படும் என்று சர்வதேச கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. (ற)

# 2,000 எத்தியோப்பிய யூதர்களை குடியேற அனுமதித்தது இஸ்ரேல்

ஜெருசலேம், ஓக்.16
2,000 எத்தியோப்பிய யூதர்களை இஸ்ரேலில் குடியேறுவதற்கு இஸ்ரேல் அனுமதி அளித்துள்ளது.
இதன்மூலம் கடந்த ஒரு தசாப்தத்துக்கு மேலாக நீடித்து வந்த இந்த விவகாரம் தொடர்பிலான இழுபறி முடிவுக்கு வந்துள்ளது.
இஸ்ரேலில் குடியேற சுமார் 8000 எத்தியோப்பிய சமூகத்தினர் காத்திருக்கின்றனர்.
இவர்களில் இருந்தே புதிய குடியேறிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.
அனைத்து யூதர்களுக்கும் இஸ்ரேலிய பிரஜா உரிமை அளிக்கும் இஸ்ரேலிய சட்டத்தின் கீழ் 1984 மற்றும் 1991 இற்கு இடைப்பட்ட காலத்தில் பெரும் எண்ணிக்கையிலான எத்தியோப்பிய யூதர்கள் இரகசிய நடவடிக்கைகள் மூலம் இஸ்ரேலுக்கு அழைத்துவரப்பட்டனர்.
அது தொடக்கம் இஸ்ரேலில் எத்தியோப்பிய சமூகத்தின் எண்ணிக்கை 140,000 ஆக அதிகரித்துள்ளது.
எனினும் தாம் இனப் பாகுபாட்டுக்கு முகம்கொடுப்ப தாக எத்தியோப்பிய யூதர்கள் பலரும் குற்றம்சாட்டி வருகின்றனர். (வ-இ)

## கண் கலங்கிய கிம் ஜொங் உன்

பியோங்யாங், ஒக்.16
இராணுவ அணிவகுப்பு விழாவின்போது கண் கலங்கியுள்ளார் வடகொரியத் ஜனாதிபதி கிம் ஜொங் உன்.
வடகொரியாவை ஆளும் தொழிலாளர் கட்சியின் 75 ஆண்டுகள் நிறைவு நிகழ்வு கடந்த 10ஆம் திகதி நடத்தப்பட்டது.
இதன்போது, தாய்நாட்டுக்காக பல தியாகங்களைச் செய்த வீரர்க ளுக்கு நன்றி கூறியும், குடிமக்களின் வாழ்க்கையை மேம்படுத்தத் தவறியமைக்கு வருத்தம் தெரிவித்துமே கிம் கண்கலங்கியுள்ளார். (வ-இ)



டென்மார்க் பகிரங்க பூப்பந்து:

# முதல் சுற்றில் இந்திய வீரர் வெற்றி

புதுடில்லி, ஒக்.16
டென்மார்க் பகிரங்க பூப்பந்துப்போட்டியில் ஆண்கள் ஒற்றையர் முதல் சுற்று ஆட்டத்தில் இந்திய வீரர் ஸ்ரீகாந்த், இங்கிலாந்து வீரர் டாபி பென்டியை விரட்டியடித்து 2 ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.
5 கோடி பரிசுத் தொகைக்கான டென்மார்க் பகிரங்க பூப்பந்து போட்டி அங்குள்ள ஒடென்ஸ் நகரில் நடந்து வருகிறது.
இதில் நேற்றுமுன்தினம் நடந்த ஆண்கள் ஒற்றையர் முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் உலக தரவரிசையில் 14 ஆவது இடத்தில் உள்ளவரும், முன்னாள் சம்பியனுமான இந்திய வீரர் ஸ்ரீகாந்த், 52 ஆவது இடத்தில் இருக்கும் இங்கிலாந்து வீரர் டாபி பென்டியை விரட்டியடித்து 21:12, 21:18 என்ற நேர் செற் கணக்கில் 2 ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.
இந்த வெற்றியை பெற அவருக்கு 37 நிமிடங்களே தேவைப்பட்டது. மற்றொரு ஆட்டத்தில் இந்திய வீரர் அஜய் ஜெயராம் 12:21, 14:21 என்ற நேர் செற் கணக்கில் டென்மார்க் வீரர் ஆன்டர்ஸ் ஆன்டென்சனிடம் தோல்வி கண்டு வெளியேறினார். இதேபோன்று இந்திய வீரரான சுபாங்கர் தேவ் 13:21, 8:21 என்ற நேர் செற் கணக்கில் கனடா வீரர் ஜாசன் அந்தோணியிடம் வீழ்ந்தார். (ற)



# சர்வதேச போட்டிகளில் விளையாட வேண்டும்

டி வில்லியர்ஸ்க்கு ரவிசாஸ்திரி அழைப்பு

புதுடில்லி, ஒக்.16
டி வில்லியர்ஸ் ஓய்வு பெறுவதை விடுத்து, சர்வதேச போட்டிகளில் விளையாட வேண்டும் என்று இந்திய அணியின் பயிற்சியாளர் ரவி சாஸ்திரி அழைப்பு விடுத் துள்ளார்.
உலகின் சிறந்த அதிரடித் துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான டி வில்லியர்ஸ் தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்தவராவார். இவர் 2018 இல் சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக திடீரென அறிவித்தார்.
36 வயதான டி வில்லியர்ஸ் ஐ.பி.எல். போட்டியில் பெங்களூர் அணியில் விளையாடி வருகிறார். கொல்கத்தாவுக்கு எதிராக கடந்த திங்கட்கிழமை நடந்த ஆட்டத்தில் அவர் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். 33 பந்தில் 5 நான்கு ஓட்டங்கள், 6 ஆறு ஓட்டங்களுடன் 73 ஓட்டங்கள் எடுத்தார். பந்து வீச்சுக்கு சாதகமான இந்த ஆடுகளத்தில் அவர் ஒருவரால் மட்டுமே அதிரடியாக ஆட முடிந்தது.
அவரது ஆட்டத்தை அணித் தலைவர் விராட் கோலி பாராட்டி இருந்தார்.
கொல்கத்தாவுக்கு எதிரான டி வில்லியர்சின் ஆட்டம் அற்புதமாகவும், அதிசயமாகவும் இருந்தது. அதைப் பார்க்கும் போது கனவா? நனவா? என்று எண்ணத் தோன்றியது.
இந்த நிலையில் டி வில்லியர்ஸ் ஓய்வு பெறுவதை விடுத்து, சர்வதேச போட்டிகளில் விளையாட வேண்டும் என்று இந்திய அணியின் பயிற்சியாளர் ரவி சாஸ்திரி அழைப்பு விடுத்துள்ளார். (ற)

## நீதி அமைச்சின் பொதுமக்கள் தினம் இனி 'ஒன்லைனில்'

கொழும்பு, ஒக்.16
ஒவ்வொரு திங்கட்கிழமையும், நடைபெறும், நீதி அமைச்சின் பொது மக்கள் தினத்தை ஒன் லைன் சேவைகள் மூலம் நடத்துவதற்கு தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

கொவிட் -19 வைரஸ் நிலைமை காரணமாகப் பொதுமக்கள் நீதி அமைச்சுக்கு வருவதில் உள்ள சிரமம் தொடர்பாக கவனத்தில் கொண்டு இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி மக்கள், https://bit.ly/3lIBFgq என்ற இணையத்தளத்தில் பதிவு செய்து தமது பிரச் சினைகளை முன்வைக்க முடியும். அத்தோடு நீதி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத் தளமான www.moj.gov.lk இல் பிரவேசித்து சம்பந்தப்பட்ட லிங்குக்குள் பிரவேசிக்க முடியும் என்று நீதி அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திங்கட்கிழமை நடைபெறும் பொதுமக்கள் தினத் துக்கமைவாக அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்ப டவுள்ள பிரச்சினைகளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு முன் முன்வைக்க முடியும் என்றும் அமைச்சின் ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-இ)

# மைத்திரிபால சிறிசேன இட்ட கையொப்பத்தில் மாற்றம்

### அவரது செயலராக செயற்பட்ட உதய செனவிரத்ன சாட்சியம்

கொழும்பு, ஒக்.16
பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு அமைய இராணுவப் புலனாய்வு அதிகாரிகளை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் தடுத்து வைத்து விசாரிக்க, பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் இடப்பட்ட கையொப்பத்தில் மாற்றங்கள் காணப்படுகின்றன என்று ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் உதய ஆர்.செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன் னிலையாகி நேற்று முன்தினம் சாட்சி வழங்கிய போதே அவர் இதனைத் தெரி வித்துள்ளார்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவின் ஓய்வு பெற்ற அதிகாரி டிலஞ்சன் உபசேன தெரிவித்த கருத்துக்குப் பதிலைப் பெற் றுக்கொள்ளவே முன்னாள் செயலாளர் உதய ஆர்.செனவிரத்ன ஆணைக்குழு வுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் டிலஞ்சன் உபசேனவை 2015 செப்ரெம்பர் 8 ஆம் திகதி முதல் 90 நாள்களுக்கும் அதிகமான காலம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் தடுத்து வைக்க அனுமதித்தமை குறித்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன கையொப்பம் இட்டு அனுமதித்த ஆவணம் உதய ஆர்.செனவிரத்ன விற்கு ஆணைக்குழுவால் காண்பிக் கப்பட்டது. இதன்போது மைத்திரியின் கையொப்பத்தில் மாற்றங்கள் காணப்ப டுகின்றன என்று அவர் ஆணைக்குழு வில் சாட்சியம் அளித்தார்.

2016 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 3 ஆம் திகதி அமைச்சரவையில் சமர்ப் பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத் தில் உள்ள முன்னாள் ஜனாதிபதியின் கையொப்பத்தைச் சாட்சியாளரின் கவ னத்திற்கு ஆணைக்குழு முன்வைத்தது. அந்தக் கையொப்பம் மைத்திரிபால சிறிசேனவுடையது என உதய ஆர். செனவிரத்ன உறுதிப்படுத்தியுள்ளார்.

இதன்போது வழக்கின் விசாரணை முடிந்துவிட்டது என ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி உபாலி அபேரத்ன தெரிவித் தார். (ப-இ)



## கொழும்பு மாநகரில் 6 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஒக்.16
கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகு தியில் இதுவரை 06 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர்.

கொழும்பு மாநகர சபை யின் பிரதான மருத்துவ அதிகாரி ருவன் விஜய முனி இதனைத் தெரி வித்துள்ளார்.

மினுவாங்கொட கொரோனா கொத் தணியின் பின்னர் இவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன், நேற்றைய தினம் 250 முதல் 300 பி.சி.ஆர் பரிசோதனை கள் மேற்கொள்ளப்பட் டுள் என என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப)

## பி.சி.ஆர். பரிசோதனையால் ஒருபோதும் வேதனையில்லை

### சுகாதார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.16
பி.சி.ஆர் பரிசோதனை களை மேற்கொள்ளும் போது அதிக வேதனைய ளிக்கும் எனத் தெரிவிக் கப்படும் கருத்துக்கள் பொய்யானவை என சுகாதார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் மருத் துவர் ஜயருவன் பண் டார தெரிவித்துள்ளார்.

"உலகில் பல மில்லியன் பேர் பி.சி.ஆர் பரிசோத னைகளுக்கு உட்படுத் தப்பட்டுள்ளனர். அது வேதனைக்குரிய விடயம் இல்லை. இது தொடர் பில் சரியாக அறிந்து கொள்ள நானும் பி.சி. ஆர். பரிசோதனை செய்து கொண்டுள் ளேன். சிறிய அளவில் அசௌகரியம் ஏற்பட்டா லும் அது பயப்பட வேண் டிய விடயம் ஒன்று இல்லை" என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப-இ)

## ஊரடங்கை மீறிய 142 பேர் கைது

கம்பஹா, ஒக்.16
கம்பஹாவில் பொலிஸ் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை மீறிய 142 பேர் இதுவரை கைதுசெய் யப்பட்டுள்ளனர். கடந்த 24 மணித்தியாலங்களில் மாத்திரம் 7 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரி வித்துள்ளார்.

ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட கடந்த நான்காம் திகதி முதல் நேற்றுக் காலை ஆறு மணிவரையான காலப் பகுதியிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள் ளனர் என்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித் துள்ளார். (ப)

## யாழ். விவசாயிகள் மழை வேண்டி பூசை

யாழ்ப்பாணம், ஒக்.16
உரிய காலத்தில், மழை பெய்யாததால், யாழ்.குடாநாட்டில், வயல்களை அண் டியுள்ள ஆலயங்களில் விவசாயிகள் மழை வேண்டிய பூசை வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்று விவசா யிகள் கவலை தெரிவித்தனர்.

இது தொடர்பில் விவசாயிகள் மேலும் தெரிவித்ததாவது;

காலபோகத்துக்காக விதைப்புச் செய் யப்பட்ட பயிர்கள் தண்ணீர் இன்றி வாடும் நிலையில் உள்ளன. சில இடங் களில் கிணறுகளை அண்டிக் காணப் டும் வயல்களுக்கு அவற்றில் இருந்து தண்ணீர் இறைக்கப்பட்டு பயிர்கள் காப்பாற்றப்பட்டும் வருகின்றன. இன் னும் சில நாள்களில் மழை பெய்யாவிட் டால் பயிர்கள் முற்றாகப் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

தாழ்ந்த வயல்நிலங்களில் ஈரத்தன் மைக் காணப்படுவதால் அவ்வயல்க ளில் பயிரிடப்பட்ட நெற்பயிர்கள் செழிப் பாகக் காணப்படுகின்றன.

இதேவேளை வயல்களை அண்டியுள்ள ஆலயங்களில் விவசாயிகள் மழை வேண்டிய பூசை வழிபாடுகளில் ஈடுபட் டும் வருகின்றனர்-என்றனர். (ப-17)

# முன்னணியின் கொள்கை என்ன? எனக்கு விளங்கவே இல்லை!

### பார்த்தீபன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.16
"எம்மிடம் கொள்கை இல்லை என்று அநேகமாகப் பதிவிடப்படுகின்றது. எங்களிடம் கொள்கை இல்லை கொள்கை இல்லை என்று எதைக் கொண்டு, எவ்வாறு இவர்கள் அள விடுகின்றார்கள் என்று எனக்கு விளங்கவில்லை" என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின், யாழ்ப்பாண மாநகர சபை உறுப் பினர் வரதராஜன் பார்த்தீபன் கூறி யுள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது:

"எங்களுக்கு கொள்கை இல்லை என்று தெரிவிப்பதற்கான தகுதி அதிகாரம் எவ்வாறு இவர்களிடத்தில் இருக்கின்றது. பத்து வருடங்கள் ஒரு கட்சியின் ஸ்தாபக உறுப்பி னராக இருந்து பல தேர்தல்களில் போட்டியிட்டு, கடைசித் தேர்தலில் பலவந்தமாகப் போட்டியிட வைக் கப்பட்ட ஒருவரைத் தேர்தல் முடிந்து 6 நாள்களின் பின்னர் அவரிடம் கொள்கை இல்லை என்று கூறிக் கொண்டு கட்சியை விட்டு நீக்குவது தான் கொள்கை என்றால் உண் மையாக அந்தக் கொள்கை எம்மி டம் இல்லை. தேர்தல் காலத்தில் மணிவண்ணன் வெற்றிபெறக்கூ டாது அவர் வெற்றிபெற்றால் இந்த கொள்கையைக் கொண்டு செல்ல முடியாது என்று எமக்கு கூறிய வரே, மணிவண்ணன் என்னும் சட்ட ஆளுமை, தமிழ்த்தேசியத்தின் செழுமை, அவன் வெற்றியே தமி ழருக்குப் பெருமை என்று கவிதை எழுதிப் போடுவது தான் கொள்கை என்றால் அந்தக் கொள்கை எமக்கு இல்லை. மணி இல்லாவிட்டால் அழிந்து விடுவோம் என்று எமக்குக் கூறி மணியைக் கொண்டு வருவ தற்கு எம்மைக் கருவியாகப் பயன் படுத்திய பின்னர் மணியை நீக்கிய போது ஏன் நீக்கினீர்கள் என்று கேட்டதற்குக் கட்சி அழிந்தாலும் பர வாயில்லை இது தான் முடிவு என்று கூறுவது தான் கொள்கை என்றால் அது எங்களிடம் இல்லை"-என்றுள் ளது. (ப)

## கையூட்டுப் பெற்றார்களென பணிப்பாளர், அதிகாரி கைது

கொழும்பு, ஒக். 16

ஊவா மாகாண நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளரும் திட்டமிடல் அதிகாரியும் கையூட்டு பெற்றுக்கொண்டனர் என்ற கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இலஞ்ச மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் முன்னெடுத்த சுற்றிவளைப்பில் அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். முறைப்பாட்டாளரின் காணியில் இடம்பெறும் வெல்லவாய பிரதேச சபைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட வேண்டிய பரிந்துரைகளுக்கு ஒப்புதல் பெற்றுக்கொள்ள உதவுவதற்காக திட்டமிடல் அதிகாரி 14 ஆயிரம் ரூபா பணத்தை கையூட்டாகப் பெற்றுக்கொண்டுள்ளார் என்று இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் விசாரணைப் பிரிவு பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பத்மினி வீரசூரிய தெரிவித்துள்ளார்.

கையூட்டாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் பணிப்பாளருக்கு வழங்க திட்டமிடப்பட்டிருந்தது என்றும் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (த-இ)

## அறிவித்தல்
## கேள்வி கோரல்

**யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வது) 637, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் (பண்டிக்கோட்டு பிள்ளையார் கோயில்** அருகில்) எனும் முகவரியில் அமைந்துள்ள எமது முன்னாள் பணிமனை **திருத்த வேலைகள் மற்றும் வர்ணம் பூசுவதற் கான கேள்வி கோரப்படுகின்றது.** முடிவுதிகதி **23.10.2020.** இவ்வேலைக் கான விவரத்தை பார்வையிடவும், விண்ணப்பப் படிவத்தையும் அலுவலக கடமைநேரம் காலை **8.30 - 4.30** மணிவரையும் சனிக்கிழமை காலை **8.30 - 1.30** வரையும் **826/12 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் (உப்புக்கடை ஒழுங்கை தட்டாதெரு)** எனும் முகவரியில் அமைந்துள்ள எமது அலுவலகத்தில் தொடர்பு கொள்ள முடியும்.

**தலைவர்,**
தொ. இல. **021 222 3131**

**கொள்வனவு**
நெல், தேங்காய், கொப்பறா, தானிய வகை கொள்வனவு செய்யப்படும்.
**தொடர்பு: 077 772 2215**

## கடை வாடகைக்கு
சுன்னாகம் - ஜெட்மோட்டஸ் அருகில் இயங்கும் பிரபல கல்வி (தனியார்) நிறுவனத்திற்கு அருகில் உள்ள கடை வாடகைக்கு உண்டு.
**076 804 1197 , 077 940 5606**

## ரிஷாத் பதியுதீனை கைதுசெய்யாதது ஏன்?

*பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் சட்டமா அதிபர் கேள்வி*

கொழும்பு, ஒக். 16

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியூதீனை கைதுசெய்வதற்கு ஏற்பட்டுள்ள தாமதம் தொடர்பில் கேட்டறிவதற்காக சட்டமா அதிபர் தப்புலடி லிவேரா குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு அழைப்பு விடுத்திருந்தார் என்று சட்டமா அதிபரின் இணைப்பு அதிகாரி நிஷாரா ஜயரத்ன குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது ரிஷாத் பதியூதீன் கைதுசெய்யப்படாமைக் கான காரணம் கேட்டறியப் பட்டது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியூதீன் உள்ளிட்ட மூன்று பேரை கைது செய்துசெய்யுமாறு சட்டமா அதிபர் பதில் காவத்துறை மா அதிபருக்கு உத்தரவிட்டிருந்தார். இதனையடுத்து அவரை கைது செய்வதற்காக 6 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. அந்த குழுக்கள் முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியூதீனின் இல்லங்களில் தேடுதல்களை மேற்கொண்டன. எனினும், அவர் இதுவரை கைதுசெய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தாம் கைது செய்யப்படுவதை தடுக்கக்கோரி முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியூதீன் சட்டத்தரணி ஊடாக மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளார். (த-இ)

## போதனா சோதனையில் மூவருக்கு கொரோனா!

யாழ்ப்பாணம், ஒக்.16

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் 3 பேர் கொரோனாத் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் நிலையத்தில் உள்ளவர்கள் என்றும், மினுவாங்கொட கொரோனாத் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 193 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவர்களில் 3 பேர் மட்டும் கொரோனாத் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர். (எ-இ)


### திருத்தம்
### கேள்வி அறிவித்தல்
### வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் -2020

13.10.2020ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தல் விளம்பரத்தில் கேள்விப் பிணைவைப்புத் தொகை அட்டவணையில், வேண்டப்படும் தரம் "வீதி" என்பதற்குப் பதிலாக "கட்டடம்" என மாற்றியமைக்கப் படுகின்றது.

| தொர். இல | வேலைவிபரம் மற்றும் கேள்வி இல | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் (கட்டடம்) | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 1 | புதிதாக அமைக்கப்பட்ட மருதனார்மடம் மரக்கறிச்சந்தை சுற்று வளாகத்தில் நிலக்கல் பதித்தல் | 4.255 Mn | 60 நாட்கள் | C8 / C7 | 43,000.00 | 26.01.2021 |

**க.தர்ஷன்,**
தவிசாளர்
பிரதேசசபை பெறுகைக்குழு
வலிகாமம் தெற்குபிரதேசசபை
சுன்னாகம்.
15.10.2020.

## மரண அறிவித்தல்



**தோற்றம்** 15.07.1939 **மறைவு** 15.10.2020

### வயித்திலிங்கம் இராசதுரை (சிவம்)

(K.V.R) (ஓய்வு பெற்ற இலங்கை போக்குவரத்து சபை சாலைப் பரிசோதனைப் பொறுப்பதிகாரி)

பழைய வீதி கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் கே.கே.எஸ். வீதி சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வயித்திலிங்கம் இராசதுரை (K.V.R.) ( ஓய்வு பெற்ற இலங்கை போக்குவரத்து சபை சாலைப் பரிசோதனைப் பொறுப்பதிகாரி) அவர்கள் நேற்று (15.10.2020) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வயித்திலிங்கம் அன்னம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான திருமேனி கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், மற்றும் பவளமணியின் அன்புக் கணவரும், மைதிலி (தையல் போதனாசிரியர், கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களம் பிரதேச செயலகம் காரைதீவு), ரேவதி, (ஆசிரியை, யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பளை, யா/ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்) வாசுகி (ஆசிரியை, யா/தெல்லிப்பளை சைவப்பிரகாச வித்தியாலயம்), ஆகியோரின் பாசமிகு தந்தையும், தவராசா (பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் தொழில் திணைக்களம் கல்முனை), தர்மசீலன் (நீர்க்குழாய் பொருத்துநர்), ஹரிகரன் (ஆசிரியர் யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பளை), ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான இரத்தினம், இராசம்மா, வேலுப்பிள்ளை (தவம்) மற்றும் நல்லையா (பவா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், கோகிலமணி, மற்றும் துரைசிங்கம் (இத்தாலி), மனோன்மணி, துரைராஜா (ஜேர்மனி), தர்மராஜா, ஜெயமணி, ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுதனின் (பவளம் கடை, ஐயனார் ஸ்ரோர் உரிமையாளர்) சிறிய தந்தையும், சபரீசன், விபுதன் (மாணவர்கள் யா/யூனியன் கல்லூரி), சகானுஜா (மாணவி, யா/உடுவில் மகளிர் கல்லூரி), முகிலாசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.10.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்**

**T.P: 077 073 6409 / 077 799 9323 / 077 620 5049**

## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலயத்தின் ஆசிரியர் **திருமதி ரேவதி தர்மசீலன்** அவர்களின் அன்புத் தந்தையார்


### வயித்திலிங்கம் இராசதுரை

15.10.2020 அன்று காலமாகிவிட்டார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்.

**நலன்புரிக்கழகம்**
**யா/ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்**

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் **சின்னையா கந்தசாமி**

உதிப்பு 17.03.1943
உதிர்வு 28.09.2019

**திதி: 16.10.2020 வெள்ளிக்கிழமை**

பாசத்தின் உறைவிடமாய் பண்பின் இலக்கணமாய்
வாழ்வாங்கு வாழ்ந்து எமக்கெல்லாம் வழிகாட்டியாய்
எம்மை வாழ வைத்த தெய்வம்
எம்மை விட்டுப் பிரிந்து இன்றுடன் ஓராண்டு மறைந்தனவே
தினமும் நினைத்து தவிக்கின்றோம்.

மீசாலை வடக்கு,
மீசாலை.

**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



### திருமதி நடேஸ்வரி முத்துக்குமாரசாமி

யாழ். சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடேஸ்வரி முத்துக்குமாரசாமி நேற்று (15.10.2020) வியாழக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை, மங்கையக்கரசி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நடராஜா, சோதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நடராஜா முத்துக்குமார சாமியின் அன்பு மனைவியும், விக்னேஷ் (சுவிஸ்), முருகதாஸ் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், மகேசலிங்கத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யாழ் அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி) அன்புச் சகோதரியும், மயில் வாகனம், சத்தியலோகநாயகி, ஜெகதேவி ஆகியோரின் மைத்துனியும், ரகுவரன், குமரேசன், சிவேந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (16.10.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் மதியம் 12.00 மணியளவில் காளையன்புலம் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**விக்னேஷ் -0041 763033834**
**முருகதாஸ் -0044 7474573062**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
08 . 04 . 1926



மறைவு
16 . 09 . 2020

கடந்த (16.09.2020) புதன்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்ப தலைவர்

### அமரர் செல்லத்துரை இரத்தினம்


அவர்களின் மரணச்செய்தியறிந்து ஓத்தாசை புரிந்தவர்களுக்கும், ஆறுதல் கூறிய அன்பு உள்ளங்களுக்கும், தொலைபேசி மூலம் தொடர்புகொண்டோர் களுக்கும், மலர் அஞ்சலி செலுத்தியோருக்கும், உள்நாட்டு, வெளிநாட்டு உறவினர்கள் அனைவருக்கும், இறுதி நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**10/6, 3 ஆம் குறுக்குத்தெரு ,**
**கொழும்புத்துறை,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**
**077 605 9972**

## மரண அறிவித்தல்

தோற்றம்
16 . 09 . 1951



மறைவு
15 . 10 . 2020

### சின்னத்தம்பி செல்வராசா

வேலணை கிழக்கு முதலாம் வட்டாரம் சாட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி செல்வராசா நேற்று (15.10.2020) வியாழக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், சரவணையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பொன்னையா தங்கச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், பூமணி, பாலசிங்கம், ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வராணியின் பாசமிகு கணவரும், கிருசாந்தி, பிரதீபன் (சுவிஸ்), பிரதீசன், சர்மிளா, பிரசாத், ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், திவாகரன், சசுனா (சுவிஸ்), துர்சிகா, உதயகுமார், டிலேனியா ஆகியோரின் அன்பு மாமனாரும், வீரசிங்கம், சரோஜினிதேவி, சிவபாக்கியம் (அவுஸ்ரேலியா), செல்வநாயகம் (சுவிஸ்), மனோகரன், மகேந்திரன் (டென்மார்க்), புஸ்பராணி, சாந்தகுமாரி, விஜயகுமாரி, தமிழ்ச்செல்வி (ஜேர்மன்), ஜெயசீலன் (கனடா), ஆகியோரின் அன்பு மைத்துனரும், சாக்ஸ்சியா, தருன், சுயானுஜா, சுஜாந், கவிசாந், றியானிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2020) வெள்ளிக்கிழமை காலை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் பூதவுடல் சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**077 583 2154**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



தோற்றம்
04 . 10 . 1948

மறைவு
13 . 10 . 2020

### மூத்ததம்பி வீமராசா

(ஓய்வூதியர் - FA பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் - யாழ்ப்பாணம்)

காரைநகரைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மூத்ததம்பி வீமராசா 13.10.2020 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி - லட்சுமி தம்பதியரின் மகனும், காலஞ் சென்றவர்களான கோபாலசாமி - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், தனகாம்பிகையின் கணவரும், திருமதி ஜெயதேவன் தக்சாயினி (NSB) யாழ்ப்பாணக் கிளை ), காலஞ்சென்ற மாதுமையாள் ஆகியோரின் தந்தையும், து. ஜெயதேவனின் ( உதவிக் கல்விப்பணிப்பாளர் - வலயக் கல்விப் பணிமனை - தென்மராட்சி) மாமனாரும், ஜெ.கணதீபனின் அம்மப்பாவும், காலஞ்சென்ற நல்லமுத்து மற்றும் திருமதி அன்னமுத்து, இந்திரசித்து, திருமதி செல்லமுத்து, சித்திரசேனன், தேவராசா, செல்வராசா, பரராசா, தர்மராசா ஆகியோரின் சகோதரனும், திருமதி செ. மோகனாம்பாள், திருமதி யோ.கனகாம்பிகை (ஜேர்மனி), திருமதி உ.பாலாம்பிகை (ஆசிரியை - கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் மைத்துனரும், செ. அகிலா, திருமதி ச.மாலதி, (பொறியியலாளர் - தே.நீ.வ.சபை) ஆகியோரின் சிறியதந்தையும், யோ. இன்பயோகி, யோ. கோபி (ஜேர்மனி), உ. நிதர்சன் (பொறியியலாளர் Sierra), உ. சரண்யா (இறுதி வருட பொறியியல் பீட மாணவி - மொறட்டுவை பல்கலைக்கழகம்) ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.10.2020 புதன்கிழமை அன்று நடைபெற்றது.

நாட்டின் சூழ்நிலை காரணமாக இந்த தகவலானது பின்னர் அறிவிக்கப்படுகின்றமைக்கு வருந்துகின்றோம்.

**426/1, கில்னர் ஒழுங்கை,**
**யாழ்ப்பாணம்.**
**T.P.:021 221 7623**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

## கொரோனா...

ளுடன் நெருங்கிய தொடர்பைப் பேணிய வர்களுமே கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதையடுத்து மினுவாங்கொட கொரோனா கொத்தணிப் பரவலின் எண்ணிக்கை ஆயிரத்து ஆயிரத்து 797ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் கொரோனா வைரஸின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 ஆயிரத்து 244 ஆக அதிகரித்துள்ளது. அதில் 3 ஆயிரத்து 380 பேர் குணமடைந்துள்ளனர். ஆயிரத்து 851 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 13 பேர் உயிரிழந்துள்ளனர். (எ-22)

## சுகாதார....

இந்த வர்த்தமானி அறிவித்தலின் அடிப்படையில் கொரோனாக் கட்டுப்பாட்டு சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை மீறுபவர்களுக்கு எதிராக 10 ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத தண்டம் அல்லது 6 மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்படலாம், அல்லது இரு தண்டனைகளும் விதிக்கப்படலாம்.

சமூக இடைவெளியைப் பேணுதல், முகக் கவசம் அணிதல் உட்பட முக்கிய சுகாதார பாதுகாப்பு நடைமுறைகள் இந்த விசேட வர்த்தமானி அறிவித்தலில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்றும் கூறப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக வர்த்தக மற்றும் பணி இடங்களுக்குள் பிரவேசித்தல் மற்றும் பேணுதல் போன்ற விடயங்களும் இந்த வர்த்தமானி அறிவிப்பின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

பணியிடங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களுக்குள் பிரவேசிக்கும் அனைவரும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் முகக்கவசம் அணிந்திருத்தல்.

இருவருக்கிடையில் ஒரு மீற்றருக்குக் குறையாத சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தல்.

பணி இடங்களுக்குள் பிரவேசிப்பதற்கு முன்னர் அனைத்து நபர்களினதும் உடல் வெப்பத்தை அளவிடுதல்.

கிருமிநாசினி திரவத்துடன் போதுமான வகையில் கைகளைக் கழுவுவதற்கான வசதிகளை வழங்குதல்.

உட்பிரவேசிக்கும் அனைத்து நபர்களது பெயர், அடையாள அட்டை இலக்கம் மற்றும் தொடர்பை ஏற்படுத்தக்கூடிய தகவல்கள் தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய ஆவண பதிவை மேற்கொள்ளல்.

பணி இடங்களில் ஆகக் கூடிய ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் ஏனைய நபர்களின் எண்ணிக்கை மேற்படாதவகையில் வைத்துக்கொள்ளுதல்.

இதே போன்று பயண வரையறை, தனிமைப்படுத்தல் அலுவல்கள், போக்குவரத்து அலுவல்கள் போன்ற விசேட விடயங்களுக்கான சட்டத்தை மேலும் வலுப்படுத்துவதற்கு இந்த வர்த்தமானி அறிவிப்பின் மூலம் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (எ-இ)

## முடங்கும்...

த்துள்ளனர். அங்கு புதிய தொற்றாளர்களாக அடையாளம் காணப்படுபவர்களில் பலர் அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவர்களாக உள்ளனர் எனவும், அதனால் தொற்று அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இலங்கையின் தலைநகராகவும் பல்வேறு நிறுவனங்கள் அமைந்துள்ள மாவட்டமாகவும் சன நெருக்கடி அதிகமுள்ள இடமாகவும் கொழும்பு விளங்குகின்றது. அங்கு நேற்றுமுன்தினம் மட்டும் 61 பேர் கொரோனாத் தொற்றுடன் காணப்பட்டுள்ளனர். நேற்றும் பலருக்குத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பு மாவட்டத்தில் கொரோனா வைரஸ் காரணமாக கடும் ஆபத்து நிலவுகின்ற பகுதிகளில் தேவைப்பட்டால் ஊரடங்கைப் பிறப்பிப்பதற்குத் தயாராக இருக்கின்றோம் என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டத்தில் பொதுமக்கள் அத்தியாவசிய தேவை கருதி மட்டும் வெளியில் செல்ல வேண்டும் எனவும், அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் கடமையாற்றுவோர் சமூக இடைவெளியைப் பேணி சுகாதார வழிகாட்டல்களைக் கட்டாயம் பின்பற்ற வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கொழும்பு மாநகர சபை நேற்று முதல் மூடப்பட்டுள்ளது. அதேவேளை, பொது மக்கள் நிவாரண திணைக்கள காரியாலயத்தை இரண்டு வாரங்களுக்கு பூட்டிவிடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் கொழும்பு மாநகர சபை நகர ஆணையாளர் அலுவலகம் நேற்று அறிவித்துள்ளது.

### கொழும்பு மாநகர மேயருக்கு இன்று பி.சி.ஆர். சோதனை

இதனிடையே கொழும்பு மாநகர சபையின் மேயர் திருமதி ரோஸி சேனநாயக்க இன்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளார். இந்தத் தகவலை கொழும்பு மாநகர சபையின் தலைமை மருத்துவர் ருவான் விஜயமுனி தெரிவித்தார்.

கொழும்பு டீன்ஸ் வீதியில் உள்ள கொழும்பு மாநகர சபை அறக்கட்டளை ஆணையாளர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளார். அவர் கொழும்பு மாநகர சபைக்குச் சென்றுள்ளார். அதனால் மேயர் ரோஸி சேனநாயக்க பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளார் என அவர் குறிப்பிட்டார்.

கொழும்பு மாநகர சபையின் நிதிக் குழுவின் கூட்டத்தில் மேயர் கலந்துகொண்டுள்ளார். அந்தக் கூட்டத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளான மாநகர சபை அறக்கட்டளை ஆணையாளரும் கலந்துகொண்டுள்ளார் என்று கொழும்பு மாநகர சபையின் தலைமை மருத்துவர் ருவான் விஜயமுனி மேலும் கூறினார்.

அதேவேளை கொழும்பு டீன்ஸ் வீதியில் உள்ள கொழும்பு மாநகர சபை அறக்கட்டளை ஆணையாளர் அலுவலகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. (எ-22)

## கைதை...

யால் நேற்று ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வன்னி மாவட்ட வாக்காளர்களுக்கு போக்குவரத்து வழங்கியமை, அதற்காக அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில், அப்போதைய கைத்தொழில் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீன், அப்போதைய மீள்குடியேற்றத் திட்டப் பணிப்பாளர் சம்சுதீன் மொஹமட் யாசீன், மீள்குடியேற்றத் திட்ட முன்னாள் கணக்காளர் அழகரத்னம் மனோரஞ்சன் ஆகிய மூன்று பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவர்களில் கணக்காளர் அழகரத்னம் மனோரஞ்சன் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியல் வைக்குமாறு, கொழும்பு கோட்டை நீதிவானால் உத்தரவிடப்பட்டது.

அத்துடன், குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க ரிஷாத் பதியுதீன் மற்றும் சம்சுதீன் மொஹமட் யாசீனுக்கு நாட்டை விட்டு வெளியேறத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அரசுக்குச் சொந்தமான ரூபா 95 இலட்சத்துக்கும் அதிகமான நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியதற்கு அமைய, பொதுச் சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்தியமை மற்றும் தேர்தல் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டின் பேரில், 1981ஆம் ஆண்டு இலக்கம் 15 ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தின் 82 (1) பிரிவுக்கு அமைய, அவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (ஒ-22)

## பொலிஸ்...

முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சார்ஜனான ஐ.பி.எஸ்.ஹேமந்த (வயது-42) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இவர் வீதிப் போக்குவரத்துக் கடமையில் இருந்தபோது, உழவியந்திரம் ஒன்றை மறிக்க முற்பட்டார் என்றும், உழவியந்திரம் கட்டுப்பாட்டை இழந்து இவர் மீது மோதியது என்றும் கூறப்படுகின்றது.

உழவியந்திரத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், விபத்துத் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-26)

## மூன்று..

பிரிவினர் முடக்கியுள்ளனர்.

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ள மினுவாங்கொட ஆடைத்தொழிற்சாலையின் தொழிலாளர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்த பலர் இந்தக் கிராமங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்தே சுகாதாரப் பிரிவின் அதிகாரிகள் குறித்த கிராமங்களை முடக்கியுள்ளனர்.

மினுவாங்கொடயில் மேலும் பலருக்குப் பி.சி.ஆர். பரிசோதனைகளை சுகாதாரப் பிரிவினர் நேற்று மேற்கொண்டுள்ளனர். (எ-22)

## மூன்றாம்...

பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும்.

அவற்றை மேற்கொள்ள கொரோனா வைரஸ் சோதனை தொடர்பான கொள்கைகளைத் தரமுயர்த்த வேண்டும். சரியான பரிசோதனைக் கொள்கைகளை அறிவிக்க வேண்டும் - என்றார். (எ-22)

## ரிஷாத்...

கைது செய்வதற்காகப் பொலிஸ் குழுக்கள் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி பெறாத நிலையில் உள்ளன.

இந்நிலையில், நேற்று மாலை கொழும்பிலுள்ள ரிஷாத் பதியுதீனின் இல்லத்துக்குச் சென்ற குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் அவரது மனைவியிடம் விசாரணை நடத்தியதுடன், நீண்ட வாக்குமூலம் ஒன்றையும் பெற்றுக்கொண்டனர். (எ-22)

## கொரோனாவை...

குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் உள்ளதாவது-

மினுவாங்கொட ஆடைத்தொழிற்சாலையைக் கேந்திரமாகக் கொண்டு பரவலடைந்துள்ள கொவிட்-19 வைரஸ்தொற்று காரணமாவே நாட்டில் கூலி பெறுபவர்களின் வாழ்க்கை பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. தற்போதும் பல பகுதிகளுக்கு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது, சில பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அரசின் பொறுப்பற்ற தன்மை கொவிட்-19 வைரஸ் இரண்டாம் சுற்றாக பரவலடைவதற்கான முக்கிய காரணமாக உள்ளது. கொவிட்19 வைரஸ் ஆரம்பத்தில் பரவலடைந்த காலத்தில் அரசு பொதுத் தேர்தலை வெற்றிகொள்ளும் நோக்கில் அரசியல்வாதிகள் ஊடாக மக்களுக்கு 5 ஆயிரம் ரூபாவை வழங்கியது.

தற்போது தேர்தல் ஏதும் கிடையாது. ஆனால் மினுவாங்கொட ஆடைத்தொழிற்சாலையை கேந்திரமாக கொண்டு பரவலடைந்துள்ள கொவிட்19 வைரஸ் தொற்றால் பல பிரதேசங்களுக்கு ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள பிரதேசத்தில் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசு எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை. என்றார். (எ-இ)

## பட்டப்பகலில்..

ள்ளது. வீட்டில் ஆள்கள் இல்லாத நேரம் திருடர்கள் வீட்டுக்குள் நுழைந்து நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர். இந்தத் திருட்டுத் தொடர்பாகத் தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸார் திருட்டுத் தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ-63)

## ஊடகர்கள்...

நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் முன்பாக நேற்று நண்பகல் ஒன்று கூடிய ஊடகவியலாளர்கள் அங்கிருந்து ஊர்வலமாக முல்லைத்தீவு பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம், முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், முல்லைத்தீவு மாவட்ட வனவளத் திணைக்களம் ஆகியவற்றுக்குச் சென்று கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்ககோரும் மனுக்களையும் அவர்கள் கையளித்தனர்.

ஆர்ப்பாட்டத்தின்போது, காடழிப்புத் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மரங்கன்றுகள் வழங்கப்பட்டன. முல்லைத்தீவு மாவட்ட வனவளத் திணைக்களத்தின முன்பாக மரக் கன்று ஒன்று ஊடகவியலாளர்களால் நடப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்ட ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டனர். வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோனோ தராதலிங்கம், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன், கரைதுறைப்பற்றுப் பிரதேச சபை உறுப்பினர்களான தி.இரவீந்திரன், சி.லோகேஸ்வரன் ஆகியோரும் ஆர்ப்பாட்டத்தில் பங்குகொண்டனர்.

மட்டக்களப்பு காந்தி பூங்காவுக்கு முன்பாகவும் நேற்று ஊடகவியலாளர்களால் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தை மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம், மட்டு ஊடக அமையம், இலங்கை ஊடகத்துறை தொழிற்சங்க சம்மேளனம் ஆகியன இணைந்து நடத்தியிருந்தன.

ஊடகவியலாளர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்துக் கோசங்கள் எழுப்பப்பட்டதுடன், தாக்குதல் நடத்திய வர்களைச் சட்டத்தின் முன் நிறுத்த உடன் நடவடிக்கை எடுக்குமாறும் ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. (எ-20,246)

THE WORLD BANK


கொரோனாத் தடுப்பூசிக்காக

# 12 பில்லியன் அமெ.டொலர் வழங்கும் உலக வங்கி

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் கொவிட் 19 தடுப்பூசிக்காக 12 பில்லியன் அமெரிக்க டொலரை வழங்க உலக வங்கி தீர்மானித்துள்ளது. கொரோனாப் பரவலுக்கு மத்தியில் பாதிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் ஒரு பில்லியன் பேரை இலக்கு வைத்து இந்நிதியை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என உலக வங்கி மேலும் தெரிவித்துள்ளது.

கொவிட் வைரஸுக்கான சோதனைகள், மருந்துகள் மற்றும் தடுப்பூசி ஆகியனவற்றுக்கான ஆய்வு நடவடிக்கைகளுக்காக இந்நிதி பயன்படுத்தப்படவுள்ளது. 20, 21 ம் ஆண்டுக்காக உலக வங்கி அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்காக 160 பில்லியன் அமெரிக்க டொலரை வழங்கவுள்ளது. (வ-இ)

# சுவர் இடிந்து வீழ்ந்து 9 பேர் உயிரிழப்பு



புதுடில்லி, ஒக்.16

இந்தியாவின் ஹைதராபாத்தில் சுவரொன்று இடிந்து வீழ்ந்து மூன்று குழந்தைகள் உட்பட 9 பேர் உயிரிழந்துள்ளனர். ஹைதராபாத்தில் தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக ஓல்ட் சிட்டி பகுதியில் இருந்த சுற்றுச்சுவரொன்றே அருகிலிருந்த 10 வீடுகளின் மீது விழுந்துள்ளது. தகவலறிந்து வந்த மீட்புப் படையினர் உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் படுகாயமடைந்த 4 பேர் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (வ-இ)

## ஹெலிகொப்டர்கள் மோதி விபத்து

காபூல், ஒக்.16

ஆப்கானிஸ்தானில் இரண்டு ஹெலிகொப்டர்கள் மோதிவிபத்துக்குள்ளானதில் 9 ஆப்கான் வீரர்கள் உயிரிழந்துள்ளனர். தலிபான் தாக்குதலொன்றைத் தடுப்பதற்கு ஆப்கான் படையினர் மும்மரமாக ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில் ஹெல்மண்ட் மாகாணத்தின் நாவா பகுதியிலேயே இந்த விபத்து நேற்று அதிகாலை ஏற்பட்டுள்ளது என அந் நாட்டு பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. விமானம் ஒன்றில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறே விபத்துக்கான காரணம் என்றும் ஆரம்ப கட்டதகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன. (வ-இ)

# ட்ரம்பின் மகனுக்கும் கொரோனா



வொஷிங்டன், ஒக்.16

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் மகன் பெரோன் ட்ரம்ப்புக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. எனினும் அவர் வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. 14 வயது சிறுவனான பெரோன் ட்ரம்புக்கு வைரஸ் தொற்று ஏற்பட்டமை பரிசோதனைகளில் உறுதிப்படுத்தப்பட்டது. அவருக்கு தொற்று ஏற்பட்டமை தொடர்பில் ஏற்கனவே எவ்வித தகவல்களும் வெளியிடப்படவில்லை. பாதுகாப்பு காரணங்களுக்காகவே பெரோன் ட்ரம்புக்கு தொற்று ஏற்பட்டமை தொடர்பில் தகவல் வழங்கவில்லை என மெலனியா ட்ரம்ப் தெரிவித்துள்ளார். எனினும் தற்போது அவர் பூரண குணமடைந்துள்ளார். அவர் வைரஸ் தொற்றிலிருந்து எப்போது குணமடைந்தார் என்பது தொடர்பில் எவ்வித தகவல்களும் வெளியிடப்படவில்லையென சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (வ-இ)

# ரஷ்யா பொறுப்புக் கூற வேண்டும்

நோர்வே நாடாளுமன் றத்தின் மீது நடாத்தப்பட்ட சைபர் தாக்குதல்களுக்கு ரஷ்யா பொறுப்புக் கூற வேண்டும் என அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது. நோர்வே நாடாளுமன்றத்தின் மின்னஞ்சல் கட்டமைப்பின்மீது கடந்த ஓகஸ்ட் மாதம் சைபர் தாக்குதல் நடாத்தப்பட்டது. நாட்டின் முக்கிய ஜனநாயக பீடத்தின் மீது நடாத்தப்பட்ட இத்தகைய தாக்குதலானது மிகவும் ஆபத்தானது என நோர்வே வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. தாக்குதலின் பின்னணியில் ரஷ்யா உள்ளமைக்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன எனவும் நோர்வே வெளி விவகார அமைச்சர் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் ரஷ்யா இந்தக் குற்றச்சாட்டினை மறுத்துள்ளது. (வ-இ)


## INVITATION FOR BIDS (IFB)

## Jaffna District Cricket Association

### Proposed Construction of External Wash Rooms, Boundary Wall and Internal Road at Mallakam Stadium

1. President, Jaffna District Cricket Association now invites sealed bids from eligible and qualified bidders for "Proposed Construction of External Wash Rooms, Boundary wall and Internal Road at Mallakam Stadium" and estimated cost LKR. 4.1 Million
   Excavation Work, Rubble Masonry Work, Concrete Work, Block work, Roof Work, Sanitary Fittings, Electrical Work, Finishes, and Road Works are the major activities; necessary to be carried out in this proposed construction.
   The Time for Completion for the whole of the Works shall be **60** Calendar days.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall meet the following requirements;
* Grade C7 or C8 in Buildings and C9 or above in Roads in the CIDA Registration
1. Qualification requirements to qualify for contract award refer clause 4.0 of the Instructions to Bidders and Qualification information of the Bidding Document.
* Valid CIDA registration as required.
* Average annual volume of construction work performed in last five years shall be at least **LKR.12 Million**
* Minimum amount of Liquid Assets or Credit Facility requested is **LKR. 800,000.00**
5. Interested bidders may obtain further information from Building Design and Consultant Engineers, No 756, 1/5, K.K.S Road, Jaffna (Tele: 021 2216878) and inspect the Bidding Documents at the address given below from 9.00 hrs to 15.00 hrs during the period from 16th October 2020 to 26th October 2020 (Working days).
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the office of the President, Jaffna District Cricket Association, No 58, Sir.Pon. Ramanathan Road, Jaffna,(K.Sasikaran Tele:076-4463205)' from 16th October 2020 to 26th October 2020 (Working days) from 9.00 hrs to 15.00hrs. Upon payment of a non refundable fee of Sri Lankan Rupees Four Thousand (LKR. 4,000.00). The Payment will have to be made by cash.
7. Sealed Bids shall be delivered in duplicate to Jaffna District Cricket Association, No 58, Sir.Pon. Ramanathan Road Jaffna, on or before 31st October 2020 at 13.00hrs. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
8. Bid shall be valid up to 31st January 2021.
9. All Bids shall be accompanied by a Bid-Security of Sri Lanka Rupees Fourty Thousand only. (LKR.40,000.00) Bid security shall be valid up to 28th February 2021

The President & Secretary
Jaffna District Cricket Association
No-58. Sir.Pon Ramanathan Road, Jaffna

# வந்தார் கெய்ல்: மீண்டது பஞ்சாப்



ஐ.பி.எல். தொடரில் நேற்று நடந்த ஆட்டத்தில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. ஐ.பி.எல். தொடரின் 31ஆவது லீக் ஆட்டம் நேற்று ஷார்ஜாவில் நடைபெற்றது. அதில் றோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணியும் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற பெங்களூர் அணி துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது.

அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக தேவ்தத் படிக்கல், ஆரோன் பிஞ்ச் ஆகியோர் களம் இறங்கினர். இருவரும் சீரான வேகத்தில் ஓட்டங்களை எடுத்தனர். பந்துப்பரிமாற்றத்துக்கு 9 என்ற ஓட்ட விகிதம் காணப்பட்டது. அணியின் ஓட்ட எண்ணிக்கை 4.1 பந்துப்பரிமாற்றத்துக்கு 38 ஓட்டங்களாக இருந்தபோது படிக்கல் 12 பந்துகளில் 18 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். 2 ஆவது விக்கெட்டுக்காக களம் புகுந்த கோலி -பிஞ்ச் இணை நின்று நிலைக்கவில்லை. பிஞ்ச் 20ஓட்டங்களுடனும் சுந்தர்- 13 பவிலியன் திரும்பினர். இறுதியில் கோலி- 48 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இறுதிக்கட்ட அதிரடியை மொறிஸ் உதான ஜோடி கணகச்சிதமாக நிறைவு செய்தது. மொறிஸ் 8 பந்துகளில் 25 ஓட்டங்களையும் உதான 5 பந்துகளில் 10 ஓட்டங்களையும் பெற்றனர். 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் பெங்களூர் அணி 6 விக்கெட்களை இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றது. 172 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணிக்கு கே.எல் ராகுல் மாயங் அகர்வால் இணை நிதானமான ஆரம்பத்தை வழங்கியது. அணியின் ஓட்ட எண்ணிக்கை 7.6 பந்துப்பரிமாற்றத்தில் 78 ஆக இருந்தவேளை மாயங் அகர்வால் 25 பந்துகளில் 3 ஆறு ஓட்டங்கள் 4 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 45 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து ஜோடி சேர்ந்த கே.எல்ராகுல் கெயில்ஜோடி வாணவேடிக்கை காட்ட ஆரம்பித்தது. இணைப்பாட்டமாக 93 ஓட்டங்கள் எடுத்தவேளை கெயில் 45 பந்துகளில் 53 ஓட்டங்கள் எடுத்து ரன் அவுட்டாக இறுதியில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது பஞ்சாப் அணி. இறுதிவரை ஆட்டமிழக்காது 61ஓட்டங்கள் எடுத்த கே.எல் ராகுல் போட்டியின் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

# இறுதி சுற்றுக்குள் விக்ரோறியன்ஸ்!!



யாழ்ப்பாணம், ஒக்.16

வருடாந்தம் நடத்தப்படும் கே.சி.சி.சி கிண்ணதுக்கான துடுப்பாட்டப் போட்டியில் அரை இறுதியாட்டத்தில் சுழிபுரம் விக்ரோறியன்ஸ் அணி வெற்றி பெற்று இறுதிச் சுற்றுக்குள் நுழைந்துள்ளது.

இந்தப் போட்டியின் அரை இறுதிப் போட்டி அண்மையில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் யாழ் மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தின் கீழ் உள்ள 24 அணிகள் பங்குபற்றின.

இதில் சுழிபுரம் விக்ரோறியன்ஸ் அணி கடந்த போட்டிகளில் ஸ்கந்தா ஸ்டார்ஸ், ரி.சி.சி, டிரேடன், ஜோனியன்ஸ் அணிகளுடன் விளையாடி இறுதி அரை இறுதிப்போட்டியில் ஜொலி ஸ்டார்ஸ் அணியுடன் விளையாடியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சுழிபுரம் விக்ரோறியன்ஸ் அணி களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜோலி ஸ்டார்ஸ் அணி 24.1 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 199 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.10

200 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி எனும் இலக்குடன் களமிறங்கிய சுழிபுரம் விக்ரோறியன்ஸ் அணி 29.4 பந்துகளில் எட்டு இலக்குகளை இழந்து வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது. (ற-இ)

## விலகினார் மிஸ்பா

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தேர்வுக்குழுத் தலைவர் பதவியிலிருந்து மிஸ்பா உல் ஹக் விலகியுள்ளார்.

சிம்பாவேக்கு எதிரான தொடருக்கு அணியைத் தேர்வு செய்த பின்னர், தேர்வுக்குழுத் தலைவர் பொறுப்பில் இருந்து விலகுவதாகவும், தலைமை பயிற்சியாளர் பொறுப்பில் கூடுதல் கவனம் செலுத்தி பணியாற்றவுள்ளதாகவும் தெரிவித்துள்ள நிலையில், அவர் அந்தப் பதவியிலிருந்து விலகியுள்ளார். கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம், பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தேர்வுக்குழுத் தலைவர் மற்றும் தலைமை பயிற்சியாளர் ஆகிய இரு பொறுப்புகளிலும் மிஸ்பா உல் ஹக் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற)



**காணிகள் விற்பனைக்கு**

* யாழ்ப்பாணம் நவக்கிரி பாடசாலைக்கு முன்பாக 12 பரப்பு காணி விற்பனைக்குண்டு பிரித்துக் கொடுக்கப்படும்.
* யாழ்ப்பாணம் ராச வீதியில் மாசுவன் சந்திக்கு அண்மையில் கொம்பன் வீதியில் 6 பரப்பு காணி விற்பனைக்குண்டு

தரகர் தேவையில்லை

**077 805 1655**

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் தெற்கு மில் றோட்டில் நாகதம்பிரான் கோயிலுக்கு அண்மையில் 28 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. பிரித்தும் கொடுக்கப்பட்டும் (2 பரப்பாக). 1 பரப்பின் விலை 5 லட்சம். தரகர் தேவையில்லை.

தொடர்பு: 077 190 4814

**CHEMISTRY**
**ZOOM Classes**
**2021 - Physical Chemistry**
Mon & Wednesday 8.00- 9.30 PM
**2022 - Chemical Calculations**
Tue & Friday 8.00- 9.30 PM
ஆரம்பம் 25.10.2020 (8.00P.M)
இணைய விரும்பும் மாணவர்கள் 23.10.2020 இற்கு முன்னதாக முற்பதிவுகளை மேற்கொள்ளவும்.
(Full Name, School, NIC No, Payment slip photo என்பவற்றை Viber, Whatsapp or Telegram ஊடாக அனுப்பவும்.)
A/C 74757086 BOC K.Subeesan
1000/- per month
Ka.Subeesan - 077 430 7829



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.